# செய்திக்கதிர்

இருவார செய்தி விமர்சனத் தொகுப்பு




1-10-85

# படையெடுப்புக்கு ஆயத்தமா?



# பெண் போராளிகள்

அட்டைப்படம்

சமூகரீதியிலான உரிமை
கள் சீர்திருத்தங்களைக் கோரி
பெண்கள் ஆண்களுடன்
சேர்ந்தும், பெண்கள் விடு
தலை (Women Lib) அமைப்பு
களில் தனித்தும், ஊர்வலங்
கள், கோஷங்கள், மறியல்
போன்ற மிதவாதப்போ
ராட்டங்களை நடத்திவருவது
இன்று உலகின் பல்வேறு
நாடுகளிலும் சாதாரணமாக
நிகழ்கின்றன ஆனால் அரசி
யல்ரீதியான போராட்டங்கள்
மேற்குறித்தவை போல மித
வாதப் போராட்டங்களாக
மட்டும் இருப்பதில்லை இதற்
குக் காரணம் அரசியல் உரி
மைகளைக் கோரி நடத்தப்
படும் சாத்வீக மிதவா
தப் போராட்டங்களைச் சம்
பந்தப்பட்ட அரசுகள் மதி
யாது, அப்போராளிகளுக்கு
எதிராக அடக்குமுறைகளை
யும் ஆயுதங்களையும் பிர
யோகிப்பதே. அத்தகைய
வன்முறைப் பிரயோகங்களே
அரசியல் உரிமைகளைப் பெறு
வதற்கான போராட்டங்
களைத் தீவிரமாக ஆயுதப்
போராட்டங்களாக மாற்றி
விட்டிருப்பதை உலகின்பல
நாடுகளிலும் நாம் இன்று
காண்கிருேம்.

**சர்வதேசப் பெண்**
**போராளிகள்**

எனவே அரசியல் உரிமை
களுக்காகப் போராடத் தீர்
மானிக்கும்பெண்கள் ஆயுதங்
களையும் ஏந்த நேரிடுகிறது.
முதன் முதலில் செஞ்சீனப்
புரட்சியின் போதே பெருந்
தொகையான பெண்கள்
ஆயுதம் ஏந்திய போராளி
களாக மாறினர்கள். அதன்
பின்னர் நிகழ்ந்த கியூபா
புரட்சியிலும். வியட்நாம்
போரிலும் பெண் போராளி
கள் முக்கிய பங்கெடுத்த
னர். உலகில் சிறந்த
பெண் கெரில்லாப் போ
ராளிகளாக வியட்நாமின்
மறைந்த புரட்சித்தலைவர்
ஹோசிமின் உருவாக்கிய
வியட்நாமியப் பெண் கெரில்
லாக்களே விளங்கினர். தற்
பொழுது நிகராகுவா, எல்
சல்வடோர், அயர்லாந்து
போன்ற நாடுகளில் நடை
பெறும் புரட்சி அல்லது
விடுதலைப் போராட்டங்
களில் பெண் போராளிகளின்
அமைப்புகள் குறிப்பிடத்
தக்க பங்கை பெறுகின்றன.

**தமிழீழப் பெண் போராளிகள்**

இலங்கையிலும் தமிழீழ
இயக்கங்களைப் பொறுத்த
வரையில் பெண் போராளி
களின் தொகை பெருகிவரு
வதுடன் தாக்குதல்களிலும்
பெண் போராளிகள் முக்கிய
இடத்தைப் பெற்றுவருவதா
கக் கருத இடமுண்டு.
ஷோபா என்ற பெண்
போராளிஈழமக்கள்புரட்சிகர
விடுதலை முன்னணி (EPRLF)
நடத்திய காரைநகர் கடற்
படைத்தளத் தாக்குதலில்
தீவிர பங்கெடுத்து போராட்
டத்தின் போதே மரணம
டைந்தமுதல்பெண்போராளி
யாக விளங்கிஞர். ஊர்மிளா
எனப்படும் மற்றுமொரு
பெண்போராளியே தமிழீழ
மக்கள் விடுதலை இயக்கத்
தின் (PLOT) பெண் போ
ராளிகள் அமைப்பை உரு
வாக்குவதற்கு காரணமாக
இருந்தார். கொழும்பு ஒப
ரோய் ஹோட்டல் குண்டு
வெடிப்புத் தாக்குதலில் ஒரு
பெண் போராளி முக்கிய
இடத்தை வகித்ததாகக்
கூறப்பட்டது.

அனுப்பியது :- க. தந்தகுமாரன்



சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களை ''விசாரணை செய் இன்றேல் விடுதலை செய்'' என்று யாழ். நகரில் சென்ற 24 ஆம் தேதி நடந்த மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் மழையையும் பொருட்படுத்தாது மாணவ மாணவியரும் கலந்து கொண்ட காட்சி.

# பயங்கரவாத ஒழிப்பா; இன அழிப்பா; படையெடுப்பா?

இலங்கையின் கடற்படையை பலப்படுத்துவதற்கு மேலும் ஆறு கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது' வவுனியா, மட்டக்களப்பு பலாலி மற்றும் தமிழ்ப் பகுதிகளிலுள்ள விமான நிலையங்கள் 'விஸ்தரிப்பு' என்றபெயரால் பெரும் இராணுவ முகாம்களாக மாற்றி அமைக்கப்பட்டுவருகின்றன. புதிய போர் விமானங்கள், யுத்த ஹெலிகொப்டர்கள் மற்றும் நவீன ஆயுதங்களும் இராணுவசாதனங்களும் இங்கு வந்திறங்கிக் கொண்டிருக்கின்றன.

'போர் நிறுத்தம்' அமுலில் இருக்கும்போதுதான் இந்தப் பெரும் 'யுத்த ஆயத்தங்கள்' மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலங்கை அரசின் இந்த நடவடிக்கைகளைப் பார்க்கும் எவரும் உள்நாட்டில் தோன்றிய 'பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கையா அல்லது ஒரு பெரும் படையெடுப்புக்கான ஆயத்தமா? என்று கேட்கவே செய்வர்.

''இலங்கை இராணுவமயமாக்கப்பட்டுவரும் வேகம் எம்மைத் திகிலடையச் செய்கிறது'' என்று கொழும்பு மாவட்ட மேற்றிராணியார் அதி வண. சுவீதின் பெர்ணாண்டோ மேற்றிராணிமார்கள் மற்றும் சகல பிரிவு கிறிஸ்தவ மதகுருமார்களும் கலந்துகொண்ட ஒரு மாநாட்டில் குறிப்பிட்டிருப்பது சிந்தனைக்குரியது'

சர்வகட்சி மாநாடு, வட்டமேசை மாநாடு, புதுடில்லிப் பேச்சு என்று நீண்டு திம்புப் பேச்சில் நின்று இன்னும் எந்தவித முடிவும் இல்லாமல் பண்டாரி டில்லிக்கும் கொழும்புக்கும் சென்னைக்கும் திம்புவுக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உங்களோடு

தர்மதுவீபத்தில், தர்மிஷ்ட ஆட்சியில் தமிழ் மக்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே அகதிகளாக, அநாதைகளாக அலைந்து திரியும் அவல நிலை!

அகதிகளுக்கு உதவி ஆண்டவன்; ஆள்பவன் அக்கறையெல்லாம் வேறெதிலோ!

இன அழிப்பைத் தடுக்கவும் அகதிகளுக்கு உதவவும் சர்வதேச அமைதிப்படையை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளை இங்கு அனுப்பவேண்டுமென்ற கோரிக்கை செவிடன் காதில் ஊதிய சங்கு!

ஈழத் தமிழர் நிலையை ஒரு கோடி தமிழர் கையெழுத்திட்டு உலக அரங்கான ஐ. நா. வுக்கு அனுப்பியும் கண்திறக்கவில்லை!

ரஜீவ் காந்தி பிரச்சனையைத் தீர்ப்பாரென்ற நல்லெண்ணமும் நம்பிக்கையும் இன்னும் எத்தனை காலத்திற்கு! ஐ. நா பாதுகாப்புச் சபைக்குக்கூட பாதுகாப்புக் கோரிக்கைக் குரல் எட்டவில்லை!

வெளிநாடுகளிலுள்ள தமிழ் அகதிகள் அங்குள்ள சமூக அமைப்புக்களைத் தூண்டி ஓரளவாவது பயன் கிடைக்கலாம்.

—கோபு


செய்த்க்கதிர்
இருவார செய்தி விமர்சனத் தொகுப்பு

செய்தி-1 1-10-85 கதிர்-3

வெளியீடு: சாய்பாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ், 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23336—22437


### சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| இலங்கை — | ரூ. | 90-00 |
| இந்தியா | இந். ரூ. | 125-00 |
| சிங்கப்பூர் | U. S. டாலர் | 15-00 |
| மலேசியா | U. S. டாலர் | 15:00 |
| பிறநாடுகள் | U. S. டாலர் | 25-00 |


கொடுப்பனவுகள்:
சாயிபாபா அசோசியேற்ஸ்

# பயங்கரவாத ஒழிப்பா; இன

3-ம் பக்கத் தொடர்ச்சி

மிடையில் பறந்துதிரிவதைத் தவிர வேறொன்றையும் காணமுடிய வில்லை.

அதி உத்தமர் திடீர் திடீரென ஒவ்வொரு யோசனையை ஒவ்வொரு இடத்தில் கூறுகிறார். நமது பந்தோபஸ்து திடீரென்று வெளிநாடு ஒன்றுக்குப் போய்த் திரும்புகிறது, அரசியலமைப்புப் பற்றி இப்போது தான் ஆராய்வதற்காக சட்ட வல்லுநர் குழு டில்லிக்கும் அமெரிக்காவுக்கும் யாத்திரை செய்கிறது! ஆனால் ஆயுதங்கள் இங்கு வந்து குவிந்துகொண்டிருக்கின்றன; தினமும் தமிழர்களின் தொகை குறைந்துகொண்டிருக்கிறது; தமிழர் தமது சொந்த மண்ணிலேயே அனைகளாக, அகதிகளாக முகாம்களில் தஞ்சமடைந்துகொண்டிருக்கிறார்கள். ''தமிழருக்குப் பாரம்பரிய பிரதேசம்'' என்று ஒன்று மில்லை என்பதை நிதர்சனமாக்குவதில் ஆட்சி அதிகாரப் போட்டியிலீடுபடும் சிறிமாவின் சுதந்திரக் கட்சியும் யானைக்கட்சியும் போட்டி போட்டுச் செயற்படுகின்றன.

இந்தியப் பிரதமர் ரஜிவ்காந்தி. இலங்கைத் தமிழர் பிரச்னையை நல்ல முறையில் தீர்த்து வைப்பாரென்று குர்க்ஷித் ஆலம்கான், எம். ஜி. ஆர்., அமிர்தலிங்கம், தொண்டமான் தொடக்கம் அமெரிக்காவரை நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

தமிழர்பிரச்னை விரைவில் தீர்ந்துவிடுமென்ற அதி உத்தமரும் நம்பிக்கை தெரிவிக்கத் தவறவில்லை, தமிழர் தீர்ந்துவிட்டால் பிரச்னை தீர்ந்துவிடுவதில் தடையென்ன!

ஐந்து கோடி தமிழர் இருக்கிறார்களென்று நிதி அமைச்சர் சொன்னதை அதிஉத்தமரும் சமீபத்தில் சுட்டிக் காட்டியிருந்தார். ''இலங்கையில் தமிழருக்காக தமிழ்நாடு ஆக்கிரமிப்பு மேற்கொண்டால் அதுதான் தமிழரின் முடிவு'' என்று அதிஉத்தமர் ''இந்தியா டுடே'' என்ற சஞ்சிகையின் ஆசிரியருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருந்ததும் தமிழரை முற்றாக ஒழிக்க நான் விரும்பவில்லை'' என்று கூறியதும் நினைவில் கொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டில் இலங்கை அரசின் ஒற்றர்களின் நடமாட்டம் அதிகரிப்பதாகவும் அவர்கள் அங்கு இயக்கங்களிடையேயுள்ள வேறுபாடுகளை நன்கு பயன்படுத்துகிறார்களென்றும் சமீபத்தில் காந்தி காமராஜ் கட்சித் தலைவர் திரு. ப. நெடுமாறன் குறிப்பிட்டிருந்ததும் சிந்திக்க வேண்டியவை.

இந் நிலையில் தமிழ் நாட்டில் முதலமைச்சர் தலைமையில் தமிழக அமைச்சர்களும் மத்தியஅமைச்சர்களும்தமிழ்நாட்டில் ஒருநாள் உண்ணாவிரதமிருப்பதும், கடையடைப்பு ஹர்த்தால்ஊர்வலங்கள் நடத்துவதும் உண்மையில் நமக்குத் தார்மீக ஆதரவைத் தந்த போதிலும் இலங்கை அரசுக்கு தமிழ்நாடு ஒரு ''கடதாசிப் புலி''யாகவே தோன்றும்.

இங்கு சிங்கள அரசுகளுக்கு எதிராக சத்தியாக்கிரகம், மறியல், உண்ணாவிரதம், கடையடைப்பு, ஹர்த்தால் எல்லாம் தமிழரசும் கூட்டணியும் கையாண்டு புளித்துப் போன பின்தான் தீவிரவாதிகள் தலையெடுத்தனர்! இன்று அவர்களும் உண்ணாவிரதம், ஊர்வலம் என்பது வேறு விஷயம்! ஒரு கோடி தமிழரின் கையெழுத்து ஐ. நா. வில் பயன்தரவில்லை. அமைதிப்படை, செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் கோரிக்கை செவியில் ஏறவில்லை. தமிழ்நாடு விழிப்புடன் செயல்படா விட்டால் அகதிகள் தான் மிஞ்சும்!

பாகிஸ்தான் இலங்கைக்கு ஆயுத உதவியளிக்கிறது சீனவிடமிருந்தும் ஆயுதஉதவியும் மற்றும் உதவிகளும் கிடைக்கின்றது. பர்மாஒரு பௌத்தநாடு. அந்தப் பெயரை வைத்தே பர்மாவின் உதவியையும் இலங்கை அரசு பெற்றுக்கொள்ளும்: பாகிஸ்தானுக்குஅமெரிக்கா ஆயுதங்களைத் தாராளமாகக் கொடுக்கிறது. பாகிஸ்தானுடன் இந்தியாவுக்குள்ள உறவும் சீனவுடன் இந்தியாவுக்கு இன்று பிணக்கு இல்லாவிடினும் உறவுமுறை தெரிந்தது! இந்நிலையில் இலங்கை இந்தியாவுக்கு 'தமிழர் பிரச்னையைப்பேச்சுவார்த்தைமூலம் தீர்ப்பதற்கு அமெரிக்காவின் ஆதரவுடன் ஒத்துழைப்பு வழங்குகிறது!

இந்தியாவை அமெரிக்கா என்றும் கழுகுப் பார்வை பார்ப்பதுண்டு இலங்கையின் திருமலைமீது அதற்குத் தணியாத ஆசை!

## கருணாநிதியின் எச்சரிக்கை!

தொடர்ந்து விடுதலைப் புலிகளை வெளியேற்றுகிற காரியம் நடக்குமானல் எங்கள் சார்பாக விடுதலைப் புலிகளை உருவாக்குகிற முகாம்கள் தொடங்கப்படும். தமிழ்நாட்டு வாலிபர்களே அந்த முகாம்களில் இருப்பார்கள். ''அனுமதிப்போமா'' என்று கேட்டால், தமிழ்நாட்டில் காடுகளா இல்லை; வீரப்பன் மிச்சம் வைத்துள்ள காடுகள் இன்னும் உண்டு.

கருணாநிதி
(கல்கி 8-9-85)

## கிரிக்கெட் போட்டி 'கல்கி' கண்டனம்!

தென் ஆபிரிக்காவின் இன வெறிக்கொள்கையை எதிர்ப்பதால் அங்கு போகமறுக்கும் கிரிக்கெட் குழுவினர் அதைவிடக் கொடுமையாகத் தமிழர்கள் தாக்கப்பட்டும் இலங்கைக்குச் சென்றதும், அவர்கள் கிரிக்கெட் கண்ட்ரோல் போர்டினால் அனுப்பப்பட்டதும், இதைத் தடுக்கத் துப்பில்லாமல் மத்தியில் ஒரு விளையாட்டுத்துறை அமைச்சர் வேறு இருப்பதும், எத்தனைதான் தலையில் அடித்துக் கொண்டாலும் போதாது, அத்தனை மானக்கேடு!

இப்படி, கல்கி, இம்மாதம்8ஆம்தேதியஇதழில் கேள்வி பதில் பகுதியில் கண்டனம் தெரிவித்துருக்கிறது. இந்திய கிரிக்கெட் கோஷ்டி அடைந்தபடு தோல்விக்குஎன்ன பதில்சொல்லுமோ!

# தமிழ்க் கிராமங்கள் மறைகின்றன;

# வெளி உதவிகளும் அகதிகளும்!

நான் கடைசியாக நெடுங் கேணிக்குச்சென்றிருந்தபோது, தூர இருந்து டொலர், கென்ட் பண்ணைகளை பார்க்கிற ஒரு வாய்ப்புக் கிடைத்தது. தண்ணீர் அள்ளுவதற்காகச் சென்றுகொண்டிருக்கும் ஒரு சிங்களப் பெண்ணையும் அவளுக்கருகில் துப்பாக்கியுடன் பாதுகாப்புக்காக நடந்து சென்ற ஒரு வாலிபனையும் கண்டேன். இரவில் இவ்விரு பண்ணைகளும் அமைந்திருக்கும் இடங்கள் . பிரகாசமான மின் விளக்குகளால் ஒளிபெற்று காட்டிற்குள் ஒரு நகரம் போலவேகாட்சி தரும்.

டொலர், கென்ட் பண்ணைகளை அண்மித்து இருந்த தமிழ்க் கிராமங்கள் இப்போது இல்லை. பட்டிக் குடியிருப்பு, ஓதியமலை என்று கிராமம் கிராமமாக எமது மக்கள் வெளியேறி வந்துவிட்டார்கள். அவர்களுடைய வீடுகளையும், தோட்டங்களையும் தென்னைகளையும், யானைகளும், யானைக் கட்சியின் ஊர்காவல்படையும் தின்று தீர்த்துவிட்டன.

திருகோணமலையிலும், திரியாய், குச்சவெளி, நிலாவெளி, சாம்பல் தீவு போன்ற இடங்களில் இருந்து தமிழ் மக்கள் வெளியேறிவிட்டார்கள். சிங்கள மக்களும் முக்கியமான பல இடங்களிலிருந்து வெளியேறிச் சென்றிருக்கிறார்கள். தமிழ்ப் பிரதேசங்களின் எல்லைப் புறங்களை இலங்கையின் தேசப் படத்தில் ஒரு முறை பார்த்தால் அதனுடைய சிக்கலான, நீண்ட அமைப்பு எமக்குத் தெளிவாக விளங்கும்.

திருகோணமலை மாவட்டத்தையும், முல்லைத்தீவு மாவட்டத்தையும் துண்டாடுவதற்காக, 'பதவியா' எனும் பிரதேசத்தைச் சிருஷ்டித்து அதை மெல்ல மெல்ல வளர்த்துச்சென்று தென்னைமரவாடி, நாயாறு, கொக்கிளாய் ஆகிய தமிழ்ப் பிரதேசங்களுடன் இணைத்து சிங்கள மீனவர்களையும் குடியேற்றிவிடுவது அரசின் பிரதான திட்டம், இது போலவே குச்சவெளிக்கும், புல்மோட்டைக்கும் இடையில் இருக்கும் புடவைக்கட்டு எனும் மீனவர் கிராமத்தில் சிங்கள மக்களைக் குடியேற்றி, பிரேமதாசாவின் கொங்கிறீற் குடிசைகளும் போட்டுக்கொடுத்து பெயரையும் 'சாஹர புர' என்றுமாற்றிவிட்டார்கள். இதுநடந்துநீண்ட நாளாயிற்று. நீர்கொழும்பு, வென்னப்புவை போன்ற இடங்களிலிருந்து 'சாஹர புர' விற்கு திருமலையூடாக அடிக்கடி கடுகதி பஸ்சேவையும் நடைபெற்று வந்துள்ளது,

குச்சவெளியிலும், புடவைக்கட்டிலும் காணப்பட்ட பௌத்த புதை

**சித்தார்த்தா**

பொருள் சின்னங்களைச் சாட்டாக வைத்து இத்தகைய குடியேற்றங்களுக்கு 'இறைமை' பெறப்பட்டது.

இத்தகைய முயற்சிகள் நேரடியாக - ஒழிவுமறைவின்றி தமிழ் மக்களின் 'இருப்பை' சவாலுக்கிழுப்பதாகும். இம்முயற்சிகளைவிட அண்மையில் மாதுறு ஓயா திட்டப்பகுதியில் உள்ள 9 சிங்கள மக்களின் கிராமங்களை அம்பாறை மாவட்டத்துடன் இணைத்துவிட அரசு தீர்மானித்துள்ளது. அம்பாறை மாவட்டத்தில் திடீரென 93,000 பேரால் சிங்கள மக்களின் சனத்தொகை அதிகரிக்கப்போகிறது. இது போலவே டொலர், கென்ட் பண்ணைகளிலும் 20,000 பேரை வாக்காளர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்போவதாக அரசு தெரிவித்திருக்கிறது.

'போர் நிறுத்தம்' என்றால் என்ன. 'பகைமை உணர்வுகளின் தற்காலிக நிறுத்தம்' என்றால் என்ன அரசு தன்னுடைய திட்டங்களில் மிகவும் அவதானமாகவும், அதே சமயம் தமிழ் மக்களின் பலவீனமான அம்சங்களை நாடி பிடித்துப் பார்த்துத் தாக்குவதாகவும் உள்ளது.

உண்மையில் மாதுறு ஓயா திட்டம் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் - தொகுதி B எல்லாம் கிழக்கைத் தமிழ் மக்களின் பாரம்பரிய பூமி என்ற வரைவுக்குள் இருந்து அப்பால் தள்ளுவதே ஆகும். மகாவலி அபிவிருத்தித் திட்டம் தொகுதி B யில் அடங்கும் தமிழ்ப் பிரதேசங்களுக்கு வெட்டப்பட உள்ள வாய்க்கால்கள் சிங்களப் பிரதேசங்களில் உள்ள பெரும் வாய்க்கால்களின் கட்டுப்பாட்டிலேயே வரக்கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது.

அடிப்படையில் நீர் விநியோகப் பிரச்னை என்பது இங்கு இரு தேசிய இனங்களுக்கிடையேயான பிரச்சினையாகவே அமைந்துள்ளது.

எத்தகைய அரசியல் தீர்வு இடையில் பெறப்பட்டாலும் நிலம், பிரதேச எல்லை, மக்கள் செறிவு இவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அதிகாரம் இல்லாதுபோனால் நாங்கள் எமது 'தேசியத்தை' இழக்க வேண்டி ஏற்படும் என்பது அபாயகரமான உண்மையாகும். உண்மையில், அரசு இஸ்ரேலிடமும், அமெரிக்காவிடமும் இந்தத் திட்டங்களைத் தான் பிரதானமான ஆலோசனையாகப் பெற்றுள்ளது. டக்ளஸ் வியனகே, இஸ்ரேலுடன் இணைந்து ஒரு விவசாய அபிவிருத்தி நிறுவனம் ஒன்று ஆரம்பித்திருக்கிறார் என்பது பழைய விஷயம் என்றே நினைக்கிறேன்.

அமெரிக்கர்களும், மேற்கு ஜேர்மனியர்களும், இன்னும் ஏனைய பல்

(18ஆம் பக்கம் பார்க்க)

# காட்சியும் - கணிப்பும்



ஈழத் தமிழ் மக்களுக்கு பிரிந்து செல்லும் உரிமையுடன் மாநில சுயாட்சி வழங்க வேண்டுமென்றும் தமிழர் உரிமைகளை வழங்கி பிரச்னையைத் தீர்க்கவேண்டுமென்றும் கூறும் நவசமசமாஜக்கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார சமீபத்தில் லண்டனிலும் இப்படியே குரல் கொடுத்தார். வெலிக்கடைப்படுகொலை நினைவு ஊர்வலத்தில் கலந்துகொண்ட இவர் 'சிங்களவர் மானத்தை இதன் மூலம் காப்பாற்றினேன்' என்று விளக்கமளித்தார்.

## இது ஏவுகணையல்ல....

இதைப் பார்த்தால் ஏவுகணைபோல் தெரிகிறதா? திருக்கோணமலையில் அகதிகளாகத் தஞ்சமடைந்திருந்த மக்கள் மீதும் வானத்திலிருந்து பொழிந்த குண்டு மழைகளில் ஒன்றுதான் இது!





## இவை ஏவுகணைகளுமல்ல.....

இவை ஏவுகணைகளல்ல. கடலிலிருந்து கரையோரத்தில் வாழும் மக்களின் குடிசைகளுக்கும் முற்றங்களுக்கும் பறந்து வந்து காட்சி தந்த தோட்டாக்கள்.




# சுவர்கள் சொல்லும் செய்திகள்

சுமார் கால் நூற்றாண்டுகளுக்கு முன்னர் நவசீனத்தில் கலாச்சாரப் புரட்சி தொடங்கியது. இப்புரட்சியின்போது சீனத் தலைமைப் பீடத்திலுள்ளவர்கள் முதல் அடிமட்டத்திலுள்ளவர்கள்வரை பகிரங்கமாகவிமர்சிக்கப்பட்டார்கள். பொதுக்கூட்டங்களிலோ சீனப் பத்திரிகைகளிலோ இவர்கள் விமர்சிக்கப்படவில்லை. சுவர்ப் பத்திரிகைகள் (Wall papers) என்று வர்ணிக்கப்பட்ட சுவர்ப் பத்திரிகைகளிலேயே இவர்கள் விமர்சிக்கப்பட்டனர். அதிகாலையில் எழுந்ததுமே மக்கள் கூட்டம் கூட்டமாக வீதிகளிலுள்ள சுவர்களின் முன் கூடிவிடுவார்கள் சுவரொட்டிகளும் சுவர்களில் எழுதப்பட்டவைகளும் சுவர்ப் பத்திரிகைகளாகக் கருதப்பட்டன. இப்பொழுது இலங்கையில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் 'சுவர்ப் புரட்சி' ஏற்பட்டிருக்கிறது. ஆரம்பத்தில் போராட்டத்தில் உயிர் நீத்த தங்கள் தோழர்களுக்கு வீர அஞ்சலி செலுத்தும் சுவரொட்டிகளை இயக்கங்கள் வெளிப்படுத்தின. பின்னர் இவை ஆயுதப்படையினால் பலியானவர்களுக்கு மட்டுமல்லாது தவறான தீர்ப்புக்களினால் பலியானவர்களுக்கும் அஞ்சலி செலுத்தும் சுவரொட்டிகளும் சமூக விரோதச் செயல்களுக்காகத் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் பற்றிய விமர்சனங்களும் சுவர்ப்பத்திரிகைகளில் இடம் பெற்றன. பொதுத் திட்டத்தின் கீழ் ஒற்றுமைப்படுவோம் என்று சகல இயக்கங்களையும் ஒன்று சேர அழைக்கும் சுவரொட்டிகளும் காணப்படுகின்றன. அரசுக்கெதிரான தாக்குதல்களில் தாங்கள் சாதித்தவைகளையும் இயக்கங்கள் இந்தச் 'சுவர்ப்பத்திரிகைகள்' மூலமே பொதுமக்களுக்கு அறியத் தந்தன. இவற்றுடன் நின்றுவிடாது உணவு உற்பத்தியிலீடுபடவேண்டியதன் அவசியத்தையும் கசிப்பு உற்பத்தியையும் உபயோகத்தையும் ஒழித்துக் கட்டுவதற்கும் சுவரொட்டிகள் அறைகூவல் விடுக்கின்றன, கட்டாயக் கருத்தடைக்கு எதிரான பிரச்சாரமும் சுவரொட்டிகள் மூலம் இடம்பெறுகின்றன.

'கல்லும் சொல்லாதோ கவி' என்பது போல சுவரும் சொல்லாதோ செய்தி!

# திம்புப் பேச்சின் பின் நடந்தது என்ன?



திம்புப் பேச்சு முறிந்த பின் நடந்தது என்ன; மூவர் மீது இந்திய மத்திய அரசு நாடு கடத்த உத்தரவு பிறப்பித்தது ஏன்?



ஈழத்தேசியவிடுதலைமுன்னணியின் பேச்சாளர் டாக்டர் ஏ. எஸ். பாலசிங்கமும் திரு. எஸ். ஸி. சந்திரகாசனும் நாடு கடத்தப்படுவதற்கான உத்தரவை இந்திய மத்திய அரசு பிறப்பிப்பதற்குக் காரணம் என்ன?

மத்திய அரசுக்கு யாரோ தவறான ஆலோசனை கூறியதுதான் இந்தக் குழப்பங்களுக்குக் காரணம் என்று ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

நாடு கடத்துவது என்று மத்திய அரசு முடிவு செய்தது. அதற்கான உத்தரவு பிறப்பிக்கவேண்டிய நிர்ப்பந்தம் தமிழக அரசுக்கு ஏற்பட்டது. ஒரு பிரதிச் செயலாளர்தான் இநத உத்தரவைப் பிறப்பித்தார் பாலசிங்கம், சந்திரகாசன் ஆகிய இருவரையும் பொலிசார் குண்டுக்கட்டாகத் தூக்கிக்கொண்டு போனார்கள்; எங்கே அழைத்துப் போகிறார்கள் என்றும் சொல்லவில்லை. முதலில் கிண்டியில் உள்ள அரச கட்டிடம் ஒன்றில் வைத்தார்கள். உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் பேச அவர்கள் அனுமதி கேட்டபோது மறுக்கப்பட்டது. சந்திரகாசன் தனது காரியதரிசி சூரியகுமாரியையும் செல்லையா என்ற நண்பரையும் பார்த்தேயாகவேண்டும் என்று பிடிவாதமாகச் சொல்லவே அவர்கள் அழைத்துவரப்பட்டனர்.

சந்திரகாசனை மலேஷியா போகுமாறு வற்புறுத்தியிருக்கிறார்கள். அவர் மறுத்துவிட்டார். ''மலேஷியாவுக்கும் இலங்கைக்கும் ஒரு உறவு இருக்கிறது. எங்களை இலங்கை அரசிடம் ஒப்படைத்துவிடுவார்கள்'' என்று காரணம் சொன்னார்.

பாலசிங்கம் பிரிட்டிஷ் பிரஜை; அதனால் அவர் லண்டனுக்கு அனுப்பப்பட்டார். கடைசியில் சந்திரகாசனை அமெரிக்காவுக்கு அனுப்பப் பெரும்பாடாயிற்று.

## நாடு கடத்தல் நாடகம் ஏன்; நாகாக்காதவர் யார்?

மனைவியிடம் பேசாமல் விமானம் ஏறமாட்டேன் என்று சொல்லிவிட்டார் சந்திரகாசன், பிறகு மனைவியைப் பார்த்துப் பேச அனுமதித்தார்கள். சந்திரகாசனுக்கு டிசம்பர் வரை இந்தியாவில் தங்குவதற்கு விசா இருக்கிறது. எப்படியோ சந்திரகாசன் ஒரு சதம் செலவில்லாமல் பம்பாய் வழியாக அமெரிக்கா சென்று, பின்னர் பம்பாய் வழியாகவே சென்னை வந்து சேர்ந்தார்.

சந்திரகாசன் எங்கே போனார் என்று தெரியாமல் இருந்தவர் இன்று திடுதிப்பென்று இலங்கைத் தமிழர் தலைவராகிவிட்டார்.

இதேபோல்தான் திரு. சத்தியேந்திராவும்! இந்திய மத்திய அரசு நாடு கடத்துவதற்கு முன்னரே அவர் லண்டனுக்குச் சென்றுவிட்டார். சத்தியேந்திரா இன்றைய ஜெயவர்த்தன அரசு ஆட்சிக்கு வந்ததும் தொழில் அமைச்சில் செயலாளராகப் பணியாற்றியவர். பிரபல வழக்கறிஞர். பண்டாரநாயகா கொலை வழக்கில் திருமதி விமலா விஜயவர்தனவுக்காக ஆஜராகி அவருக்கு விடுதலை தேடிக் கொடுத்தவர். குட்டிமணி, தங்கத்துரை வழக்கில் அவர்களுக்காக ஏற்பட்டு வாதாடியதன் மூலம் தமிழ்மக்கள் மத்தியில் அவர்பெயர் பெற்றார். இங்கிலாந்துக்குப் போய்ச் சேர்ந்தபின் அவரைப் பற்றிய நினைவே இங்கு யாருக்கும் இருக்கவில்லை.

### நாடு கடத்தும் நிலை ஏற்பட்டது ஏன்?

இவர்களை நாடு கடத்த வேண்டுமென்று இந்திய மத்திய அரசு தீர்மானிப்பதற்கு என்ன காரணம்? இரண்டு காரணங்கள் முக்கியமாகப் பேசப்படுகிறது.

விடுதலைப் புலிகளைத் தன்னுடன் பேச வருமாறு பிரதமர் ரஜிவ்

(14-ம் பக்கம் பார்க்க)

''இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வுக்கு இந்தியாவின் நல்லெண்ண உதவிகளே பெரிதும் தேவைப்படுகின்றன. இப் பிரச்சனை குறித்த சமரச முயற்சிகளில் அமெரிக்கா தலையிடமாட்டாது; முட்டுக்கட்டையாகவும் இருக்காது'' என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சு இந்திய அரசாங்கத்திடம் உறுதியாகத் தெரிவித்துள்ளதாம்.

அமெரிக்கா ''தலையிட மாட்டாது'' என்று சொல்வதை உலகில் எவருமே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

''பங்களாதேஷ்'' உருவாவதற்கு முன் பெருந்தொகையான கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் இந்தியாவில் தஞ்சம் புகுந்தபோது, இந்த அகதிகள் பிரச்சனைக்கு தீர்வு காணவேண்டுமென, மேற்கு வல்லரசுகளை, குறிப்பாக அமெரிக்காவை பிரதமர் இந்திரா கேட்ட போது, ''அகதிகளுக்கு உதவி செய்கிறோம்'' என்று கூறியது அமெரிக்கா. 'பங்களாதேஷ்' உருவாகும் சமயத்தில் ஏழாவது கடற்படையை அனுப்ப முயன்றதும் அமெரிக்கா தான்.

உலகில் எத்தனை நாடுகளில், கஷ்டப்படும் மக்களுக்கு எதிராக அமெரிக்கா அட்டூழியங்கள் செய்ததென்பதை இங்கு சுருக்கமாகப் பார்ப்போம்.

# தமிழர் பிரச்னையில் தலையிடாத அமெரிக்காவின் தலையீடுகள்!

**1945—1949** — நவசீனாவின் புரட்சிகர வெற்றியைத் தடுப்பதற்காக அமெரிக்கா சீனாவில் 1,13,000 துருப்புக்களையும் 600 போர் விமானங்களையும் 150 போர்க் கப்பல்களையும் அங்கு குவித்தது.

**1946—49** — கிரேக்கத்தில் ஜனநாயகப் புரட்சி தோன்றிய போது அதை அடக்குவதற்கு பிரிட்டனுடன் சேர்ந்து அமெரிக்கா 5000 கடற்படை வீரர்களையும் 200க்கு மேற்பட்ட போர் விமானங்களையும் அனுப்பியது'

**1947** — பரகுவேயில் புரட்சி தோன்றி அங்கு ஜனநாயகத்தை நிலைநாட்ட எத்தனிக்கப்பட்ட போது அதை அடக்க அமெரிக்க கடற்படையினர் அங்கு அனுப்பப்பட்டனர். அங்கு சர்வாதிகார ஆட்சி அமைக்க அவர்கள் உதவினர்,

**1948—1953** — பிலிப்பைன்சில் தொழிலாள வர்க்கத்தின் ஆயுதப்புரட்சியையொடுக்குவதற்கு பிலிப்பைன்ஸ் அரசுக்கு உதவியாக 90,000 அமெரிக்கப் போர் வீரர்கள் அனுப்பப்பட்டனர்.

**1950—1953** — கொரியாவில் அமெரிக்கா ஆக்கிரமிப்புச் செய்து யுத்தம் செய்தது. 3,50,000 துருப்புக்கள், 1000 டாங்கிகள், 1600 போர் விமானங்கள் ஆகியவைகளுடன் முந்நூற்றுக்குமதிகமான போர்க் கப்பல்களும் இந்த யுத்தத்திலீடுபட்டன.

**195±** — அமெரிக்க விமானப் படைகளின் உதவியுடன் ஸி.ஐ.ஏ. பயிற்சி பெற்ற உதவியாளர்கள் குவாட்டிமாலா மீது படையெடுத்தனர். ஜனநாயக ரீதியான ஜேக்கப் ஆர்பென்ஸின் அரசு கவிழ்க்கப்பட்டு அதற்குப் பதிலாக இராணுவ ஆட்சி அமைக்கப்பட்டது. அமெரிக்க பழக் கம்பனி தேசியமயமாக்கப்படவிருந்ததை எதிர்த்து நடந்த இப் படையெடுப்பின் விளைவாக 59,000 மக்கள் பலியானார்கள்.

**1958** — அமெரிக்க ஆறாவது கடற்படையின் உதவியுடன் கடற்படை, தரைப்படையைச் சேர்ந்த 14,000 துருப்புக்கள் லெபனானில் இறங்கி பொது மக்களின் எழுச்சியை அடக்க உதவினர்.

**1961** — கியூபாவில் புரட்சி அரசைக் கவிழ்ப்பதற்கு 500 பயிற்சி பெற்ற ஆயுதந்தாங்கிய உதவியாளர்களும் 80போர் விமானங்களும், 35 கப்பல்களும் எத்தனித்தன.

**1964** — கொங்கோவில் முற்போக்கு அரசைக் கவிழ்த்து தேசிய விடுதலைக் கிளர்ச்சியை அடக்குவதற்கு 19,000 துருப்புக்களும் 60 போர் விமானங்களும் உபயோகிக்கப்பட்டன. இதில் பிரிட்டன், பெல்ஜியத்துடன் அமெரிக்காவும் இணைந்தது.

**1964** — பனமாக்கால்வாய்ப் பகுதியிலிருந்து அமெரிக்க இராணுவம் வெளியேறவேண்டுமெனக் கோரிய பொதுமக்களை அமெரிக்கத் துருப்புக்கள் கொன்று குவித்தன.

**1964—1973** — வியட்னாமில் அமெரிக்கா இக்காலத்தில் நடத்திய மிக மோசமான, மிருகத்தனமான தாக்

(12ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்காவை அதிரவைக்கும்

ஆயுதபலத்தில் முதலிடத்துக்த போட்டிபோடும் அமெரிக்காவின் மக்களை
ணக்கில் கொன்று குவித்துக்கொண்டிருக்கிறது.

‚எயிட்ஸ்; முன்னர் ‚கே பிளேக், (Gay Plague) எனறு நிராகரிக் கப்பட்
இன்று முதல் தரமான பொதுச் சுகாதார அபாயமாகிவிட்டது.

## எயிட்ஸ்

### பிரத்தியேகத் தகவல்கள்

0 பிரபல ஹொலிவூட் சினிமாக் கதாநாயகன் றெக்ஹட்ஸன் ஒரு எயிட்ஸ் நோயாளி. அவர் தமது நோயைக் குணப்படுத்த பாரிஸ் சென்று சிகிச்சை பெற்றும் பயனின்றித் திரும்பிவிட்டார். அவருடன் சேர்ந்து நடிக்க நடிகைகள் மறுத்துவருவதால் நடிப்புத் தொழிலையே கைவிடவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

0 ஜனாதிபதி றீகன் ஒரு முன்னாள் ஹாலிவூட் நடிகராக இருப்பதாலும், எயிட்ஸ் தடுப்பு, நிதி ஒதுக்கீடு விடயங்களில் காட்டிவரும் சிரத்தையாலும் அவருக்கு எயிட்ஸின் பாதிப்பு இருப்பதாக மறைமுகமாகக் கிண்டலுடன் சிலரால் விமர்சிக்கப்பட்டாராம்.

0 6 மாதங்களுக்கு மட்டுமே வாழக்கூடிய நிலையிலிருக்கும் 32 வயதுடைய றொபெட் டொயில் என்னும் அமெரிக்க எயிட்ஸ் நோயாளி பெற்றோரும் சகோதரர்களும் கைவிட்ட நிலையில் அநாதையாகிவிட்டார். அவருடைய 65 வயதுக் காதலியும் எயிட்ஸ் பீதியால் அவரை கைகழுவிவிட்டார்.

0 ஐக்கிய அமெரிக்காவில் வாழ்ந்து வந்த ஆர்ஜன்ரைனா வாசியான சுற்றுலாப் பயணி ஒருவர் பீக்கிங்கில் எயிட்ஸ் நோயால் இறந்ததையடுத்து சீன அரசு பொதுச் சுகாதார அதிகாரிகளையும், மக்களையும் எச்சரிக்கை செய்துள்ளது.

0 முன்னாள் ஜோர்ஜியா கவர்னர் டெஸ்ரர் மடொக்ஸ் எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டு பஹாமாவில் வாழ்கிறார்.

அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம், நாகரிகம் ஆகிய சகல துறைகளிலும் உலகில் முதன்மை பெற்று விளங்கும் ஐக்கிய அமெரிக்காவில், எந்தவொரு தொற்றுநோய்ஆராய்ச்சியாளராலும்கண்டுபிடிக்கப்படமுடியாத வகையில் சுமார் 15 வருடங்களுக்கு மேலாக ஒரு அதி பயங்கர தொற்றுநோய் பரவி வந்திருக்கிறது என்றால் அதையிட்டு யாரும் ஆச்சரியப்படாமலிருக்கமுடியாது, இதுவரை 7000 அமெரிக்கர்களைப் பலிகொண்ட அந்த நோய் தற்பொழுது சுமார் ஒரு இலட்சம் அமெரிக்கர்களைப் பீடித்துள்ளது.

அதுதான் எயிட்ஸ்!

கலிபோர்னியா பல்கலைக் கழக தொற்றுநோய் ஆராய்ச்சியாளர் டாக்டர் கொட்லிப், டாக்டர்பிறீட்மன் கீன் ஆகியோரால் 1981 இல் கண்டுபிடிக்கப்பட்டு, 'எயிட்ஸ்' என அமெரிக்க நோய்க் கட்டுப்பாட்டு மையத்தால் பெயரிடப்பட்ட இந்நோய்க்குக் காரணம் **HTLV—III, LAV** எனப்படும் வைரஸ்கள்தாம் என்பது கடந்த வருடம்தான் டாக்டர் கலோ' டாக்டர் லுக் மொன்டனீர் ஆகிய தொற்றுநோய் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. நூற்றுக்கு 73 சத வீதம் தன்னினச் சேர்க்கை ஆண்களையும் (Homo sexuals), 13 சதவீதம் பாலுறவுத் தேவைகளுக்காக நரம்பூக்க மருந்துகளை ஏற்றிக்கொள்வோரையும் (Intravenous Drug users), மற்றும் அவர்களுடன் பாலுறவுகொள்வோரையும், இரத்தத் தொடர்புடைய அவர்களின் பிள்ளைகளையும் பீடிக்கும். இந்நோயின் அறிகுறிகள் நீண்ட காலத்துக்கு உள்ளடங்கியிருந்து முடிவில் வெண்குருதிக் கலங்களைத் தொடர்ச்சியாக அழிக்கும் 'கபோசிஸ் சர்கோமா' (Kaposi's Sarcoma) என்னும் புற்றுநோயையும் பின் மரணத்தையும் ஏற்படுத்தும்.

எயிட்ஸ் வைரஸ்கள் முதன்முதலில் மத்திய ஆபிரிக்காவிலிருந்து குடியேறியவர்களால் கரிபியன் தீவுகளுக்குப் பரப்பப்பட்டு. கரிபியன் தீவான ஹெயிட்டியில் விடுமுறைச் சுகபோகம் தேடிவரும் அமெரிக்கர்களால் அயெரிக்காவுக்குக் கொண்டுசெல்லப்பட்டன. தொடர்ந்து, அமெரிக்கத் தொடர்புள்ள பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, பிரிட்டன் ஆகிய ஐரோப்பிய நாடுகளிலும் எயிட்ஸ் பரவி வருகிறது.

எயிட்ஸின் அறிகுறிகள் நீண்ட காலத்துக்கு உள்ளடங்கியிருப்பதால் (வீரியமும் சத்துணவும் இருக்கும்பட்சத்தில் 15 வருடங்கள் வரையில்) இந்நோயின் பீடிப்பை அறியாமலேநோயாளிகளாக இருப்பவர்கள், பதிவு செய்யப்பட்ட நோயாளிகளின் தொகையிலும் பார்க்க10மடங்காகமதிப்பீடு செய்யலாம். ஐக்கிய அமெரிக்காவில் 1985ஜுலை வரை அறிவிக்கப்பட்ட 7000எயிட்ஸ் மரணங்கள் அந்நாட்டின் நோய்களால் ஏற்படும் மரண விகிதாசாரத்தின் 50 வீதம் ஆகிவிட்டது. இதுவரை பதிவு செய்யப்பட்ட 12067 எயிட்ஸ் நோயாளி

**விஞ்ஞானம்**

AID

ஆண்கள் தன்
இரு வெளிநாட்டவ
கப்பட்டுள்ளது. ''அ
தடுப்பதற்குச் சட்ட
யில் இது சமர்ப்பி

எயி

மருத்துவ

# அதிபயங்கர நோய்!

களின்100பேர் எயிட்ஸ் நோயாளர் களின் அல்லது நோய்காவிகளின் பிள்ளைகளாவர். அறிகுறிகளின்உள்ளடக்கம் காரணமாக நோய்தொற்றியதை அறியாத எயிட்ஸ் நோயாளியுடன் பாலுறவு கொள்ளும் அவருடைய அப்பாவி மனைவியும் பிறக்கும் பிள்ளைகளும் கூட எயிட்ஸால் பீடிக்கப்படுகிறார்கள்'

கடந்த வருடம் எயிட்ஸ் வைரஸ்கள் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து இந்நோயைத் தடுப்பதக்காக ஆராய்ச்சிகளை மேற்கொண்டுவரும் அமெரிக்க மருத்துவ ஆராய்ச்சியாளர் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டமருத்துவ முறைகளைநோயாளிகளிடம் பிரயோகித்தும் எதிர்பார்த்த பலன்காணாத நிலையில் தொடர்ந்தும் தீவிரமாக ஆராய்ந்து வருகிறார்கள். எயிட்ஸின் மருத்துவ யுள்ளது. (ஒரு மில்லியன்—பத்து இலட்சம்.)

எயிட்ஸின் தடுப்புக்குப் பயனுள்ள ஒரு மருத்துவமுறை இன்னும் கண்டுபிடிக்கப்படாத நிலையில், மருத்துவ ஆராய்ச்சியாளர் இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்காகப் பல்வேறு களியாட்ட சாலை உரிமையாளர்களையும், தன்னினச்சேர்க்கை ஆண்களையும், நரம்பூக்க மருந்தேற்றிக்கொள்வோரையும், பாலுறவுத் தொழில் புரிவோரையும் அறிவுறுத்தி வருவதுடன், அத்தகைய களியாட்ட சாலைகளை மூடிவிடும்படியும் அரச நிர்வாகத்திற்கு விதந்துரை செய்கின்றனர். எயிட்சால் அதிக பாதிப்படைந்திருக்கும் கலிபோர்னியா' நியூயோர்க் பகுதிகளில் மேற்படி அறிவுறுத்தல்களும், விதந்துரைகளும் அரசியல் காரணங்களால் செல்லுபடியாகாமலிருப்பதாகத் தெரிகிறது. எப்படியாயினும் இந்த

...ஆயிரக்க

...நோய்

## இலங்கையிலும் எச்சரிக்கை

...ளினச்சேர்க்கையில் ஈடுபட்டதாக சென்றவருடம் இங்கிருந்து நாடுகடத்தப்பட்ட
...ர் மீண்டும் இங்குவந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டு நாடு கடத்த நடவடிக்கை எடுக்
...ண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் நடந்தமாநாடொன்றில் ஆண் விபச்சாரத்தைத்
...ம் கொண்டுவருவதற்கு நகல் சட்டம் தயாரகியுள்ளதாகவும் விரைவில் அமச்சரவை
...க் கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆராய்ச்சிகளுக்காக றீகன் நிர்வாகம் 1984இல் 54 மில்லியன் டாலரை மேலதிகமாக ஒதுக்கீடு செய்ய வேண்டியேற்பட்டதுடன் 1985இல் 126 மில்லியன் டாலரை ஒதுக்கி வருட முடிவிற்குள் பயனுள்ள ஒரு எயிட்ஸ் தடுப்பு மருத்துவ முறை கண்டுபிடிக்கப்பட்டுவிடும் சாத்தியக்கூறுகள் இருப்பதாக அமெரிக்க மருத்துவத்துறை நம்புகிறது.

## இயற்கையின் தண்டனை

எயிட்ஸ் என்னும் இந்தப் பயங்கர நோய் மத்திய ஆபிரிக்காவில்தான் உற்பத்தியாகிப் பெருகியிருக்க வேண்டுமென்றும் குரங்கிடமிருந்துதான் இது உற்பத்தியாகியிருக்கலாமென்றும் கருதப்படுகிறது. ஆயினும் இது எப்படி ஏன் மனிதரிடம் பரவியது என்பது பற்றி இன்னமும் சரியாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் அமெர்க்காவில் பல வருடங்களுக்கு முன்னரே இது பரவத் தொடங்கியிருக்கிறது என்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது, இந்த நோய் இயற்கைக்கு மாறான செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு இயற்கை கொடுத்த தண்டனை என்றும் அமெரிக்காவில் இப்போது கருதப்படுகிறது.

(ஆதாரம்; 'நியூஸ் வீக்' ஆக.12)

...ம்

## எயிட்ஸ்

### பிரபல கருத்துக்கள்

0 இந்த நோய் எதிர்ப்புக்கான வீரியம் முன்பு மனிதவர்க்கமே கண்டிராத அளவுக்கு மிகவும் அற்பமாக உள்ளது— டாக்டர் வார்ட் கேற்ஸ், அமெரிக்க நோய்க் கட்டுப்பாட்டு மையம்.

0 ஒருமுறை தொற்றிவிட்டால் ஒருவர் மிகுதி வாழ்நாள் முழுவதும் நோய் தொற்றுபவராகவும் நோய் பரப்புபவராகவும் இருக்கிறார் — விலியம் ஹெசல்ரைன் போஸ்ரன் டனபார் புற்றுநோய் நிலையம்.

0 உரிய காலத்துக்கு முன் பக்குவமடைபவர்களின் குருதிக்கலங்கள் உரிய காலத்துக்குமுன் வயதாகி உரியகாலத்துக்குமுன் மரணமும் சம்பவிக்கிறது— டாக்டர் கலோ, அமெரிக்க தேசிய புற்றுநோய் நிலையம்-

0 எங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்ளவேண்டிய அவசியத்தை நாங்கள் விளங்கிக்கொள்ளவேண்டும் — டாக்டர் வால்டர் டோடில்.

0 விஞ்ஞானத்தையும் பொருளாதாரத்தையும் விருத்தி செய்வதற்கு அமெரிக்கர்கள் காட்டிய ஆர்வத்தை ஒழுக்கத்தை விருத்தி செய்வதில் காட்டவில்லை. அதன் பலன்கள்தான் இந்த நோய்—ஒரு ஆசிய ஆத்மீகவாதி.

0 பாலுணர்வுப் புரட்சியின் முடிவு காலம் இது. ஹெபெஸ் அல்லது ஹெபரிரிஸ் B மாத்திரைகளிடமிருந்து களியாட்டத்திலீடுபடுவோர் சந்தர்ப்பங்களைப் பெறலாம். ஆனல் எயிட்ஸிடமிருந்து சந்தர்ப்பங்களைப் பெற முடியாது—டாக்டர் டொனல்ட் பிரான்ஸிஸ், அமெரிக்க நோய்க் கட்டுப்பாட்டு மையம்.

0 அரசியல், பொருளாதார படைபல ரீதியில் பல நாடுகளைத் தன் ஆதிக்கத்திற்குக் கீழே வைத்திருக்கும் அமெரிக்க வல்லரசு இன்று ஒரு கொடிய நோயின் ஆதிக்கத்துக்குக் கீழே போய்க்கொண்டிருக்கிறது — ஒரு ஆசிய அரசியல்வாதி.

(ஆதாரம்: நியூஸ்வீக் ஆக, 12)

# பேசுவது உலக சமாதானம்

# செய்வது ஆயுத வியாபாரம்

''பசுத்தோல்போர்த்தபுலி'' யாக அமெரிக்கா நடந்துகொள் வதுஉலகில் உரிமைக்காகப் போ ராடும் மக்கள்மத்தியில் அமெரிக் காமீது வெறுப்பை அதிகரித்து வருகிறது.

பேசுவது உலக சமாதானம். ஆனால் செயலில் உலகில் எந்த மூலையில் பிரச்சனையை வளர்த்து சண்டையை மூட்டி ஒருவருக் கொருவர் மோதவிட்டுத்தான் இலாபமடைய முடியுமோ அதை அடைவதே அமெரிக்காவின் இலட்சியம்.

இலங்கையின் இனப் பிரச்சனை யில் தலையிட விரும்பவில்லை யென்று அமெரிக்கா கூறியது, அதுஉள்நாட்டுப் பிரச்சனை அதை அவர்களே தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் கூறியது;

'பயங்கரவாதம்' என்ற பிரச் சனையில் தலையிடுவதற்கு முன் வந்த அமெரிக்கா, அன்னை இந் திராவிடம் 'பங்களாதேஷ்' விவ காரத்தில் சூடு கண்டதை நினை வில் கொண்டு வெளிப்படையா கக் காட்டிக்கொள்ளாமல் அப் படியும் இப்படியும் சறுக்கிக் கொண்டு காலத்தைக் கடத்தப் பார்த்தது.

அன்னை இந்திராவின் மறை வுக்குப்பின் இலங்கை விவகாரத் தில் நிலைமை எந்த அளவுக்கு முற்றினாலும் இந்திராவைப் போல் அவர்மகன் துணிந்து இற ங்க மாட்டாரென்ற நம்பிக்கை அமெரிக்காவுக்கு இருக்கிறது.

தன் காலில் வந்துவிழுந்த இல ங்கை அரசின் தூதுவர்களை 'என் காலில் விழாதே, நேரே இந்தி யப் பிரதமரின் காலில் விழு' என்று சொல்லியனுப்பியது.

பிரச்சனை இன்னமும் இழுபடு கிறது!

ஆனாலும் அமெரிக்கா இலங் கைக்கு மறைமுகமாக ஆயுதம் வழங்கத் தவறவில்லை.

பாகிஸ்தான் மூலமும் தென் கொரியா மூலமும் இலங்கை ஆயுதங்கள் பெற்று வருவது பகி ரங்க ரகசியம், பாகிஸ்தானுக்கு ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த் தன சென்றது அங்கு 'சில்' அனுஷ்டிக்கவல்ல; தென்கொரி யாவுக்கு லலித் அவசர அவசர மாகத் திம்புப் பேச்சுத் தொடங்குவதற்கு முன் ஓடியது 'ஞானம்' பெறுவதற்காகவா?

இம் மாதம் 10 ஆந் தேதி வெளிவந்த வெள்ளை மாளிகை செய்தியின்படி பத்துக் கோடி ரூபா பெறுமதி வாய்ந்த ஆயு தங்களை பாகிஸ்தானுக்கு அமெ ரிக்கா விற்பனை செய்யவிருக் கிறது.

இதே சமயம் பதினேழு கோடி எட்டு லட்சம் ரூபாய் பெறுமதியான யுத்த ஹெலி கொப்டர்களை தென்கொரியா வுக்கு அமெரிக்கா விற்பனை செய்கிறது.

பாகிஸ்தான் மேலும் பல கோடி டாலர்களுக்கு அமெரிக் காவிடம் ஆயுதங்கள் வாங்க விருக்கிறது.

பாகிஸ்தான் அணு ஆயுத உற் பத்தி செய்யவிருப்பதையிட்டு மட்டுமே ரஜீவ் காந்தி கவலைப் படுகிறார். பாகிஸ்தான் இந்த ஆயுதங்களை வாங்கிக் குவித்தா லும் இந்தியா அஞ்சாமலிருக் கலாம். ஆனாலும் அது கவலை தெரிவித்துள்ளது. ஆனால் இந்த ஆயுதங்கள் இன்று இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராகவல் லவாஉபயோகிக்கப்படுகின்றன.

மேற்கு ஜெர்மனியும் விமா னத் தாக்குதல் பாதுகாப்பு ஏவுகணைகளை அமெரிக்காவிட மிருந்து வாங்கவிருக்கிறது.

உலகில் மொத்த ஆயுத வியா பாரி 'சமாதானத் தேவதை' அமெரிக்காதானே!

## தமிழர் பிரச்னை–

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குதல்களால் ஏற்பட்ட பாதிப்பு இன்னமும் வியட்னாமிலிருந்து நீங்க வில்லை.

**1964—1973**—லாவோஸில் பிற்போக்கு அரசுக்கு ஆதரவாக 50,000 துருப்புக்கள், 1500 போர் விமானங்கன், 40 போர்க் கப்பல் கள் ஆகியவற்றின் உதவியுடன் அமெரிக்கா போரிட்டது.

**1965**—டொமினிக்கன் குடியர சில் 11 அமெரிக்கப் பிரஜைகளை பாதுகாப்பதற்கு 40,000 அமெரிக் கத் துருப்புக்கள் படையெடுத்தன. இதில் 275 போர் விமானங்களும் 50 போர்க் கப்பல்களும் பங்கு கொண்டன.

**1970—75**—கம்போடியாவில் பிற்போக்கு அரசுக்கு எதிரான கிளர்ச்சியை அடக்குவதற்கு அமெ ரிக்காவின் ஏழாலது கடற்படை யைச் சேர்ந்த 70,000 துருப்புக்கள், 500 போர்விமானங்கள், 40 யுத் தக் கப்பல்சுள் உபயோகிக்கப்பட் டன.

**1983**— ''மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்துவதற்காக'' 800 அமெரிக்க கடற்படையினர் லெபனானில் இறங்கினர்.

**1983**—கிரெனடாவில் எந்த வித ஆத்திரமூட்டலுமில்லாமல் அமெரிக்கா படையெடுத்து ஆட்சி யைக் கவிழ்த்து தனது ஆதரவான பொம்மை அரசை ஆட்சியிலமர்த் தியது.

இன்னும் எத்தனையோ? இலங் கை இனப்பிரச்சனையில் தலையிட மாட்டாது என்றால் எப்படி நம்பு வது?

# விடுதலைப் போராட்ட கலாச்சார வெளிப்பாடுகள்

எப்போதும் ஒரு தேசத்தின் அரசியல் சூழலில் ஏற்படும் மாற்றங்கள் அத்தேசத்தின் கலை, இலக்கிய வெளிப்பாடுகளிலும் மிகுந்த மாறுதல்களைக் கொண்டு வரும். எமது சிறுவர்களுக்கு இப்போது விளையாட்டுப் பொருட்களாக அமைவது M - 16 ரைஃபிள் துப்பாக்கிகளின் பிளாஸ்ரிக் மொடல்கள் என்பதை நல்லூர் திருவிழாவில் அவதானித்திருக்கலாம்.

சிறுவர்கள், மழலைகளில் மட்டுமல்ல ஒட்டு மொத்தமாக எமது தமிழ் மனப்பாங்கிலேயே இன்று பெரும் மாறுதல்களும் 'புரட்சி'களும் நிகழ்ந்து வந்துள்ளன. மரணம், குருதி, தியாகம், யுத்தம், தாக்குதல், போன்ற அம்சங்களுக்கூடாக வாழ்நிலை வடிவம் பெறுகிறது.

இத்தகைய சூழலில் இன்றைய கலாச்சார வெளிப்பாடுகள் பிரதானமாகவும் மேற்குறித்த அம்சங்களைச் சூழவுமே இருக்கின்றன. ஆனால், மிகவும் வரவேற்க வேண்டியதும், ஆரோக்கியமானதுமான அம்சம்யாதெனில், எமது பாரம்பரியக் கலை வடிவங்களான தெருக்கூத்து, வில்லிசை, நாட்டுப்பாடல்கள் போன்றனவற்றிலிருந்து நவீனமயப்படுத்தப்பட்ட கலை வடிவங்களை இன்று காணக் கூடியதாக உள்ளது.

போர்நிறுத்தம் ஆரம்பமாவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக மேடையேற்றப்பட்ட 'மண் சுமந்த மேனியர்' எனும் நாடகமும், கவிதைகளும், விடுதலைப் பாடல்களும் சேர்ந்து பின்னனி இசையுடன் நிகழ்த்தப்படும் 'எங்கள் மண்ணும் இந்த நாட்களும்' எனும் கவிதா நிகழ்வும் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றன. வீதிநாடகங்களாக அமையும். ''விடுதலைக் காளி'' ''மாயமான்'' ''மக்களின் எதிரி கசிப்பு'' போன்றவையும், 'நாம் சிந்திய இரத்தம்', 'மலரும் புதுயுகம்' போன்ற நாடகங்களும் இன்று பரவலாக நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

## பாகவதர் நிதியுதவி!

ஏழிசைமன்னர் பட்டம்பெற்ற எம். கே. தியாகராஜபாகவதர், இரண்டாம் உலகமகா யுத்த காலத்தில், யுத்த நிதிக்காக ஐம்பது கச்சேரிகள் செய்து, பதது லட்சத்துக்கு மேல் வசூல் செய்து கொடுத்ருக்கிருர். சினிமா நட்சத்திரங்களில், அந்நாளில் அதிக வசூல் செய்து தந்த பாடக நடிகர் பாகவதர் ஒருவரே!

தமிழர்களின் கலாச்சாரச் சின்னங்களில் ஒன்ருன 'பறை'யே இவற்றிற்கு பிரதானமான வாத்தியத் துணையாகும் தீவிர அரசியலில் ஈடுபட்டுள்ளவர்களும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலாச்சாரக் குழுவும் இத்தகை நிகழ்ச்சிகளில் முக்கிய பங்கெடுக்கின்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கலாச்சாரக் குழுவினரின் தயாரிப்புகளாகவே, ''மண் சுமந்த மேனியர்,'' ''மாயமான்'' ஆகிய நாடகங்களும், "நாமார்க்கும் குடியல்லோம்'' என்ற வில்லுப்பாட்டும், ''நாவுக்கரசரின் சிறைவாசம்'' எனும் கதாப்பிரசங்கமும் அமைகின்றது.

எமது கலை, இலக்கியங்களை இன்னெரு தளத்துக்கு வளர்த்து விடும் இத்தகைய முயற்சிகளை மக்கள் பெருமளவில் வரவேற்பது ஆரோக்கியமான எதிர் காலத்திற்கு ஒரு குறியீடாகும் என்றுதான் தோன்றுகிறது.

இதுவரை காலமும் ஈழத்துத் தமிழ் கலை, இலக்கியப் பரப்பில் தேசிய இனப் பிரச்சினை பற்றி எழுதுவது மனைப்பான போக்காக ஆரம்பித்தது 1977 இற்குப் பிற்பாடுதான் எனினும் கூட சிறுகதைகள், நாவல் என்பவற்றில் மிகவும் அதிகமாக உயர்ந்த கலைப்படைப்புகள் வெளி வந்தமை குறைவாகவே உள்ளது. கவிதைகள் நிறையவும், உக்கிரகமாகவும் வெளிவருகின்றன.

தென்னிந்தியாவில் இருந்து வரும் சினிமாக் குப்பைகளுக்கும், வீடியோ கலாச்சாரத்துக்கும் எதிராக, ஒரு ஆரோக்கியமான கலை இலக்கியச் சூழலை பரந்த அளவில் உருவாக்கும் முயற்சியில் இன்று தொழிற்பட ஆரம்பித்திருக்கும் சகல கலாச்சார வெளிப்பாடுகளையும் ஊக்குவிப்பது நம் அனைவரதும் தலையாய கடமையாகும். அத்தகைய ஊக்குவிப்பிலேயே தமிழின் எதிர்கால வளமும், தமிழ்க் கலாச்சாரத்தின் செழிப்பும் தங்கியுள்ளது.

மனிதன், மனித நேயம் பற்றிய எண்ணக் கருக்கள் பலமிழந்து போகிற ஒரு அபாயகரமான சூற்ருடலில் இத்தகைய கலை, இலக்கிய வேறுபாடுகளே மனிதத்தின் மேன்மையையும், மனிதனின் இன்றியமையாமையையும் உரத்து முழங்க வேண்டும்.

# திம்பு பேச்சின்பின் நடந்தது என்ன?

(8ம் பக்கத் தொடர்ச்சி)

காந்தி அழைத்தார். யாரும் உடனே சம்மதம் தெரிவிக்கவில்லை, ஒருவிசேஷ விமானம் விடுதலைப் புலிகளை டில்லிக்கு அழைத்துச் செல்ல மூன்று நாட்கள் சென்னையில் காத்துக்கிடந்தது. அதனுல் 'புலிகளை முடுக்கிவிடுபவர்களை வெளியேற்றவேண்டும்'' என்று ஆலோசனை சொல்லப்பட்டிருக்கலாம்.

இம் மூவரும் விடுதலைப் புலிகளின் முக்கிய ஆலோசகர்கள் என்பதாலும் ''திம்புப் பேச்சு தோல்வி. இனி யுத்தம்தான்'' என்று பாலசிங்கம் அடிக்கடி அறிக்கை விட்டு வந்ததாலும் சத்தியேந்திரா இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ரொமேஷ் பண்டாரியுடன் மோதிக் கொண்டதும் காரணங்களாகச் சொல்லப்படுகின்றன.

ரொமேஷ் பண்டாரி ஒரு அதிகாரி என்ற தொனியில் பேசுவாராம். 'யூ பிளடி ஃபெலோஸ்' என்ற வார்த்தைகளை அடிக்கடி விடுதலைப் புலிகளுடன் உரையாடும் போது உபயோகிப்பாராம். ஒரு தடவை திரு. பண்டாரி இலங்கை அதிகாரிகள் முன்னிலையிலேயே இப்படிப் பேசினுராம். இதனுல் சத்தியேந்திராவுக்குக் கோபம் வந்து, 'மிஸ்டர் பண்டாரி, 'பிளடி' என்ற வார்த்தையைப் பயன்படுத்துவது முறையற்றது' என்று சண்டை போட்டாராம்.

பண்டாரிக்கு அதிர்ச்சியும், கோபமும் ஏற்பட்டது. இத்துடன் 'திம்புப் பேச்சு தோல்வி' என்று சந்திரகாசனும் அறிக்கை விட்டிருந்தார். இவையெல்லாம் சேர்ந்தே மூவரையும் நாடு கடத்த மத்திய அரசு உத்தரவு பிறப்பிக்கக் காரணமாம்.

## நடந்தது இதுதான் என்கிறுர் இவர்

திம்புப் பேச்சுவார்த்தைகளில் நடந்தது இதுதான் என்று விளக்கம் கொடுக்கிறுர் அண்மையில் கொலையுண்ட முன்னுள் மானிப்பாய் எம். பி. யும் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர்களில் ஒருவருமான திரு. வி. தர்மலிங்கத்தின் மகனுன சித்தார்த்தன். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் சார்பில் திம்புப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டவர் சித்தார்த்தன்.

திம்புப்பேச்சுவார்த்தைகள் முறிந்தபின், இந்திய வெளியுறவுச் செயலர் ரொமேஷ் பண்டாரி நடந்துகொண்ட முறை பற்றிக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை சித்தார்த்தன் மறுத்திருக்கிறுர்.

''திரு. பண்டாரி தமிழர்களின் நண்பன், இந்திய மத்திய அரசுக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமிடையே முக்கிய இணைப்பாகவும் அவர் விளங்கியிருக்கிறுர். திம்புப் பேச்சுக்கள் முறிந்தபின் தமிழ்ப் பிரதிநிதிகள் தங்கியிருந்த விடுதியில் அவர்களை வந்து சந்தித்த பண்டாரி, அடுத்து தமிழ்ப் பிரதிநிதிகள் கையாளக்கூடிய உத்திகள் பற்றிக் கலந்து பேசியபோது ஒரு கட்டத்தில் 'பிளடி ஹெல்' என்ற வார்த்தையை உபயோகித்து விட்டார், இச் சமயத்தில் திரு. என், சத்தியேந்திரா, மன்னிப்புக் கோர வேண்டுமென்றும், தங்களை அவர் அவமதித்துவிட்டாரென்றும் வற்புறுத்தினுர்.

இதற்கு திரு, பண்டாரி உடன் பதிலளிக்கையில், இங்கு நான் தமிழர்களின் நண்பனுக வந்திருக்கிறேனேயொழிய இந்திய ராஜிய அதிகாரியொருவராக வரவில்லையென்றும் கூறி, மகாநாட்டிலிருந்து தமிழ்ப் பிரதிநிதிகள் வெளிநடப்புச் செய்ததையும் பாராட்டினுர். என்றுலும் தான் உபயோகித்த வார்த்தைகள் மனதைப் புண்படுத்தியிருந்தால் அதற்கு மன்னிப்பும் கேட்டுக்கொண்டார்.

இதிலும் திருப்தியடையாத சத்தியேந்திரா பண்டாரிக்கெதிரா இத்திரமாகப் பேசினுர்'' என்று கூறியுள்ள திரு. சித்தார்த்தன் தற்காகப் பின்னர் தாமும் தன்னுடன் வந்திருந்த மற்றப் பிரதிநிதியுமான இரா வாசுதேவாவும் திரு. பண்டாரியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

## ஜே. ஆரின் மணி மொழிகள்

''இன்றைய அரசாங்கத்தின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் பொதுத் தேர்தலோ சர்வஜன வாக்கெடுப்போ நடத்தப்படமாட்டாது.

இன்றைய அரசின் பதவிக்காலம் முடிவுற்றதும் அரசு தவறுகள் எதுவும் செய்திருந்தால், வேறு ஆட்சியாளரைத் தெரிவு செய்ய மக்களுக்கு உரிமையுண்டு.

அரசாங்கத்தை அச்சுறுத்தல் மூலமாகவோ இராணுவ ரீதியாகவோ கவிழ்க்க முற்படுவார்களேயானுல் அது ஜனநாயக விரோத செயலாகும். ஜனநாயகத்தைப் பாதுகாக்க அரசு என்றும் பாடுபடும்,

பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவது அரசின் பொறுப்பு. இதனை சமாதானவழியில் செய்ய முடியாவிட்டால் இராணுவ வழியில் சாதிக்கப்படும் ''

—பௌத்த தலைவர்கள் மகாநாட்டில் ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்தனு. 7-9-85.

விடுதலைப் புலிகள் சிலருடன் ராமேஷ்வரத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்து திரும்பிய பத்திரிகையாளர் பக்வன் ஆர். சிங் தமது அனுபவத்தை 'த வீக்' என்ற சஞ்சிகையில் எழுதியிருந்தார். இக் கட்டுரையின் முதலிரண்டு பகுதிகள் முன்னைய இதழ்களில் வெளிவந்திருந்தன. இது மூன்றாவது பகுதி.

# உல்லாசப் பயணமல்ல உயிரைப் பணயம் வைத்து

## ( 3 )

முகம் நிறைந்த புன்னகையொன்றுடன் என்னை நோக்கிய சுபாஷ், ''இவ்வளவு மனம் கலங்குகிறீர்களே, எங்களுக்கு இது சாதாரணமானதொன்று. எங்கள் சமரில் நூற்றுக்கணக்கானோரை நாங்கள் இழந்துவிட்டோம். எனவே நாங்கள் இதனைக் கைவிடப்போவதில்லை'' என என்னைத் தேற்றினார். அதன்

---

''உல்லாசப் பயணமல்ல; உயிரைப் பணயம் வைத்து.. ...'' என்னும் இக் கட்டுரைத் தொடர் வாசக நேயர்கள் பலரின் வேண்டுதலுக்கிணங்க சிறு நூலாக வெளிவந்திருக்கிறது. பிரதி ஒன்றின்விலை இரண்டரை ரூபாய் தான்! (2/50) இன்றே உங்கள் பிரதியை வாங்கிக்கொள்ளுங்கள். இக் கட்டுரைத் தொடர் இத்துடன் நிறுத்தப்படுகிறது.

---

பொருள், இன்னும் அநேகர் இறப்பர். வெகு விரைவில் ஒரு நாள் சுபாஷ் இறந்துவிட்டதாக நீங்கள் கேள்விப்படுவீர்கள். அதனாலென்ன? எதுவுமே நேர்ந்துவிடவில்லை. முக்கியம் என்னவென்றால், தமிழ் ஈழம் இறக்கப்போவதில்லை. ஆனபடியால் மகிழ்ச்சியை வரவழைத்துக்கொள்ளுங்கள். பின்னர், செட்டியைப் பார்த்து, ''இந்த ஐயாவை கடலுக்கு அழைத்துப் போங்கள். அவர் நன்றாகத் தோய்ந்து கொள்ளட்டும். அவருடைய முகமெல்லாம் ஒரே பாடாகக் கண்டிப்போய்விட்டது. கடல் நீர் அதனை நன்கு கழுவித் துப்புரவாக்கும்'' என்றார்.

எமது வள்ளத்தை நுணுகி ஆராய்ந்து பார்த்ததில், இருபத்துமூன்று துப்பாக்கிக் குண்டுகள் அதன் மீது பட்டிருந்தது கண்ணுக்குத் தெரிந்தது. ஆயினும் குறைந்த பட்சம் அதைப்போல நாலு மடங்கு, அதாவது நூறு தரமாவது இலங்கைக் கடற்படையினர் எம்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்திருத்தல் வேண்டும். ஒரு குண்டு பெற்றோல் பீப்பாவையும் துளைத்திருந்தது. அதிர்ஷ்டவசமாக அது ஒரு தீங்கும் விளைவிக்கவில்லை. மன்னாருக்கு அணித்தாகவுள்ள கடல்மீது, இருபத்தேழு போராளிகளை இலங்கைக் கடற்படை கொன்றிருந்ததென அன்று காலை தான் அறிவிக்கப்பட்டது. நாங்கள் தாக்கப்பட்டதும் அங்கேயே. கொழும்பு அறிக்கையொன்று, குறைந்த மட்டில் இரு நூறு மக்களாவது கைதுசெய்யப்பட்டிருந்தனர் எனவும் கூறிற்று. சமுத்திரத்தைக் கடக்க முயல்கையில், பாக்கு நீரிணையில் வைத்து அவர்கள் கைதாகினர் என்றது அறிக்கை. தப்பித்துச் செல்லும் வள்ளமொன்றை இலங்கைக் கடற்படையினர் காண நேர்ந்தால், வள்ளத்திலுள்ளோர் ஆயுதம் தாங்கியோர் அல்லர், அகதிகள் என நன்றாகத் தீர்மானித்து, அதுவும் தமக்குப் பாதுகாப்பான தொலைவிலிருந்து தீர்மானித்துக் கொண்ட பின்னரேயே, ஆயுதப்படையினர் அவ்வாட்களைக் கைதுசெய்வது உண்டு. ஆயுதங்கள் இருக்கின்றமை பற்றிய அற்ப சொற்ப ''அசுகை'' தென்பட்டுவிட்டாற் போதும், அவர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தில் இறங்கிவிடுவர்.

எங்கள் இரவு அனுபவம் பற்றி எவ்வளவுக்கெவ்வளவு நினைவுகூர்ந்துகொண்டேனோ, அவ்வளவுக்கு அவ்வளவு நாம் எப்படி உயிருடன் மீண்டோம் என வியப்பில் ஆழலானேன். நாங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டைவிட்டு மீளத் தயாரானபோது சற்று நேரம் கடந்துவிட்டது. ஒருவாறு கடற்கரைக்கு வந்து, தோணி புறப்பட ஆயத்தமானவேளைதான் முகாமில் போராளிகளினது ''ஏ. கே. நாலேழு''

(16 ஆம் பக்கம் பார்க்க)

# அபாயம்! யாழ் நகர் இருளில் மூழ்கலாம்!



ஆணையாளர்
திரு .சி. வி. கே. சிவஞானம்

யாழ்ப்பாண நகர் இருளில் மூழ்கும் அபாயம் எச்சமயத்திலும் ஏற்படலாம். இதனைத் தடுப்பது பொது மக்களிடம்தான் தங்கியிருக்கிறது.

யாழ் நகரில் மின்சாரம் பாவிப்பவர்கள் எவ்வளவு மெகவாட். மின்சாரத்தைப் பாவிக்கிறார்களென்பதை அவர்கள் முறைப்படி மின்சாரம் பெறும்போது யாழ் மாநகர சபை மின்சாரப் பிரிவு தெரிந்து கொள்ள முடியும். நகரில் பல்வேறு பகுதிகளிலும் உப மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தந்தப் பகுதிக்கு வழங்கக் கூடிய மின்சாரம் இந்த உப மின் நிலையங்களிலிருந்து வழங்கப்பெறுகின்றன. முறையாக மின்சாரம் பாவிப்பவர்கள் எவ்வளவு 'மெகவாட்' மின் சக்தியைப் பெறுகிறார்களென்பதைக் கணித்துப் புதிதாக மின்சாரம் தேவைப்படுவோருக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படும். ஒரு பகுதி உப மின் நிலையத்திலிருந்து அப் பகுதிக்குத் தேவையான மின் சக்தி கொடுக்கப்பட்ட பின் மேலும் அந்த உப மின் நிலையத்திலிருந்து மின்சக்தி கொடுக்கப்பட முடியாது இருந்தால் மற்றொரு பகுதி உப மின் நிலையத்திலிருந்து மின்சக்தி கொடுக்கப்படுவதுண்டு,

ஆனால் இன்று நகரில் பலரும் மின்கம்பிகளில் கம்பிகளைக்கொழுவி மின் சக்தியை இழுத்தெடுத்து எதெதற்கெல்லாமோ உபயோகிக்கிறார்கள். இப்படிக் கொழுவி இழுத்து எடுக்கப்படும் மின் சக்தி எவ்வளவு என்று மாநகரசபையின் மின்சாரப் பிரிவினரால் கணிப்பெடுக்க முடியாது. இப்படிக் களவாக எடுக்கப்படும் மின்சக்தி அளவுக்கு அதிகமானால் அந்தப் பகுதியிலுள்ள உப மின் நிலையம் வெடித்துச் சேதமடைந்து விடும். இதைத் திருத்துவதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கை மின்சார சபைத் திணைக்களத்தில் உபகரணங்களுமில்லை!

மின்சக்தி இன்று மக்களின் அத்தியாவசிய தேவையாகிவிட்டது! வீட்டுப் பாவனைக்கு மட்டுமல்ல பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்துக்கும், கைத்தொழில், விவசாயத்துக்கும் மின்சக்தி அவசியம். மின் சக்தி இல்லையானால் இன்று பொருளாதாரமே வெகுவாகப் பாதிக்கப்படும்!

இந்நிலையில் உரிய முறையில் மின்சாரத்தைப் பெறுவதற்கு வாய்ப்பிருந்தும், மின்சார விநியோகம் அளிப்பதற்கு யாழ்.மாநகர சபை தயாராக இருந்தும் கொளுக்கிபோட்டு மின்சக்தியைக் களவாக இழுத்துளெடுத்துகண்டவற்றுக்கெல்லாம் உபயோகிப்போரால் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாவார்கள்; யாழ். நகரமே இருளில் மூழ்கிவிடும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது!

யாழ்ப்பாண நகரின் பாதுகாவலனாக பல துறைகளிலும் விளங்கும யாழ். நகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் இன்று கவலைப்படுவதெல்லாம் இதுபற்றித்தான்.'

களவாக மின்சாரத்தைக் கொழுவி இழுத்தவர்கள் சிலர் மாண்ட பரிதாபத்தையும் நினைவு கொள்ளும் ஆணையாளர் இந்த ஆபத்தான செயலினால் உயிராபத்தையும் தேடிக்கொள்கிறார்களே என்று வருந்துகிறார்.

களவாக மின்சக்தியை எடுப்பவர்களை பொதுமக்கள் குறிப்பாக முறைப்படி மின்சக்தியைப் பெறுபவர்கள் தடுக்கவேண்டுமென்றும் இல்லையேல் ஒரு சிலரின் முறையற்ற செயலால் பொதுமக்கள் அனைவருமே பாதிக்கப்பட நேரிடுமென்றும் ஆணையாளர் தெரிவித்தார்.

ஆணையாளரின் அச்சம் ஒருபுறமிருக்கட்டும். இங்கு வரும் மின்சாரத்துக்குத்தெற்கில்தான் 'சுவிட்ச்' இருக்கிறது. மின்சக்திவிரயம்என்று கூறி எதுவும் செய்யலாம்!

அபாயம்! யாழ். நகர் இருளில் மூழ்கலாம்!

## உல்லாசப் பயணமல்ல....

றைபிளை அவர்கள் மறதியாக விட்டுவிட்டு வந்துவிட்டமை அவர்களது நினைவுக்கு வந்தது. அது இல்லாவிட்டாலும் பரவாயில்லை, பயணம் தொடங்கட்டும் என்று அவர்கள் ஆலோசனை கூறினர், சுபாஷ் ''இருமன'' நிலையில் சற்றுச் சபலமடைந்தார். அவர்களுடைய ''புத்திமதியை'' ஏற்பதா? அல்லது முகாமுக்கு ஆள் அனுப்பி, அதனை எடுத்துவரச் செய்து, அதனையும் கைவசம் கொண்டு கடற் பிரயாணத்தைத் தொடங்குவதா? 'ஏ. கே. நாலேழையும் எடுத்துக் கொண்டுதான் கடற் பிரயாணம் மேற்கொள்வது நல்லது என சுபாஷ் நிதானித்துக்கொண்டார்.

ஒரு சில மணித்தியாலங்களுள் அவருடைய நிதானம் எங்கள் உயிரைக் காப்பாற்றியது. இரு மீகாமன்களும் (கப்பலோட்டிகளும்) லாவகமாக எமது வள்ளத்தினைக் கையாண்டமையும், இளங்கோ, செட்டி, ஆகியோரின் திறன் வாய்ந்த துப்பாக்கிப் பிரயோகமும் சேர்ந்து நாம் உயிருடன் தப்பித்துக்கொள்ள துணை நின்றன. கூட்டுமொத்தமாக அன்றிரவின் எமது அனுபவங்கள் அனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்தபோது, நாம் எவ்வளவோ பெரும் பாக்கியசாலிகள் என்பது எமது மனதில் உதயமாயிற்று. துர்ப்பாக்கியவசமாக, எங்கள் அதிர்ஷ்டத்தில் மனோகரனுக்குப் பங்கு கிட்டவில்லை.

# 1985 செப்டம்பர் நிகழ்வுகள்

**12-9-85ல்** — வவுனியாவில் விமானத்தள விஸ்தரிப்புக்காகத் தமிழர்களின் காணிகள் சுவிகரிக்கப் படுவதைஎதிர்த்துக்கடையடைப்பு நடத்தப்பட்டது.

0 திருகோணமலையைச் சேர்ந்த ஆலங்கேணியில் விமானப்படையி னருக்கும் தமிழ்த் தீவிரவாதிக ளுக்குமிடையில் நடந்த சண்டை யில் 9 விமானப்படையினர் கொல் லப்பட்டதாக செய்திகள் வெளி யாயின. ஆனல் விமானப்படையி னர் எவரும் கொல்லப்படவில்லை என அரசு அறிவித்தது.

0 தமிழர்களைத் தாக்குவதற் காக வவுனியாவிலும், திருகோண மலையிலும் சிங்களவர்களுக்கு இலங்கை அரசு ஆயுதம் வழங்கு வதாகச் சென்னையில் தமிழர் விடு தலைக் கூட்டணிச் செயலாளர் நாய கம் அ. அமிர்தலிங்கம் இலங்கை அரசின்மீது குற்றஞ்சாட்டினர்.

**செப். 15** — நாட்டின் நிலைமை மோசமடையும் பட்சத் தில் மக்கள் பேச்சு, நீதிச் சுதந்தி ரங்களை இழக்கவேண்டி வருமென் றும், அவசியம் ஏற்படின் புதிய சட்டங்கள் கொண்டுவரப்படுமென் றும் ஜனதிபதி ஜயவர்த்தன கூறி னர்.

0 ஈழத்தில் தமிழர்கள் கொலை செய்யப்படுவதை எதிர்த்து அகில இந்திய ரீதியில் 24ம் திகதி ஹர்த் தால் நடத்தப்படவேண்டுமென தி. மு. க. தலைவர் மு. கருணு நிதி கோரிக்கை விடுத்தார்.

**செப். 16** — வெலிக்கடைச் சிறையில் உண்ணுவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களைச் சந்திப்பதற்கு அவர்களின் பெற்றோருக்கும், யாழ். பிரஜைகள் குழு அங்கத்தினர்கள் சிலருக்கும் அரசு அனுமதி வழங்கி யிருப்பதாக யாழ், அரசாங்க அதி பர் தெரிவித்தார்.

0 அரசுக்கும், தமிழ்த் தீவிர வாதிகளுக்கும், இடையிலான யுத்த நிறுத்தத்தை மேலும் 3 மாதங்க ளுக்கு தொடர்ந்து கடைப்பிடிப்ப தாக இலங்கை அரசு அறிவித் தது.

**செப். 17**— ஈழம் தேசிய விடுதலை முன்னணித் தலைவர்கள் புதுடில்லியில் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

**செப். 18**— இலங்கை அரச படைகள் யுத்த நிறுத்தத்தை நேர் மையாகக் கடைப்பிடிக்கும் பட்சத் தில் தாமும், யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதாக ஈழம் தேசிய விடுதலை முன்னணி பாரத அர சுக்கு உறுதி கூறியதாக அறிவிக்கப் பட்டது.

0 பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட எவரும் பூசா முகாமிலோ வேறு எந்தச் சிறைகளிலோ உண்ணுவிரதம் மேற்கொள்ளவில்லையென்றும், துன் புறுத்தப்படவில்லையென்றும், தாம் வசதியாக இருப்பதாகக் கையெ ழுத்திட்டு அறிக்கை தந்துள்ளன ரென்றும் இலங்கை அரசு அறி வித்தது.

**செப். 19**— இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படு வதைக் கண்டித்து புதுச்சேரி மாநிலம் முழுவதும் 24ம் திகதி ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்கு முத லமைச்சர் ஓ. எச். எம் பாருக் தலைமையில் நடந்த சர்வ கட்சி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட் டது.

0 போர் நிறுத்தம் செய்யப் பட்ட 18 வார காலத்தில் திரு கோணமலையிலும் வவுனியாவிலும் 800 தமிழர்கள் பாதுகாப்புப் படை யினரால் கொல்லப்பட்டதாக ஈழம் தேசிய முன்னணி அறிவித்தது.

**செப். 20**— திருகோணமலை, நிலாவெளி, கன்னியா ஆகிய பகுதி களிலிருந்து படகுகள்மூலம் முல் லைத்தீவு சென்ற அகதிகள் பஸ் வண்டிகள் மூலம் யாழ்ப்பாணம் வந்தனர்.

0 யுத்த நிறுத்தத்தைக் கண் காணிப்பதற்கு சர்வதேச அமைப் பொன்றை நிறுவுவது சிரமமென் றும் சிங்கள, தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் கொண்ட உள்நாட் டுக் குழுவொன்று அமைக்க இலங்கை அரசு உடன்பட்டுள்ள தாகவும் பாரத வெளியுறவுச் செய லர் ரமேஷ் பண்டாரி அறிவித் தார்.

**செப். 21**— இலங்கைத்தமிழ் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை வழங்கப்படவேண்டுமென நவசம சமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார லண்டனில் தெரிவித் தார்.

**செப். 22**— கல்முனையிலி ருந்து பொத்துவிலுக்குச் சென்று கொண்டிருந்த இலங்கைப் போக்கு வரத்துச் சபை பஸ் ஒன்று பதி னைந்து தமிழ்ப் பயணிகளுடனும், செலுத்துனருடனும் இனம்தெரி யாதவர்களால் கடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

0 தமிழீழவாதிகளில் ஒருவ ரான சந்ததியார் தமிழ்நாட்டில் இனம்தெரியாதவர்களால் கடத் தப்பட்டார்.

**செப். 24**— ஈழத்தமிழர்கள் மீது நடத்தப்படும் வன்முறைகளைக் கண்டித்தும், உடனடித் தீர்வை வற்புறுத்தியும், ஈழத் தமிழர்க ளுக்கு ஆதரவும் அனுதாபமும் தெரிவிக்கும் முறையில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச் சந்திரன் தலைமையில் சர்வகட்சிக ளும் கலந்துகொள்ளும் உண்ணு

(18-ம் பக்கம் பார்க்க)

# தமிழீழத்தை ஆளப்போகிறவர் யார்?

## உனக்கும் பெப்பே..!

இலங்கையில் இனங்களுக்கிடையிலான மோதலையும் அழிவையும் தடுக்க சர்வதேச அமைதிப்படை ஒன்று அவசியம் என ஆஸ்திரேலிய நாட்டு அலென் மிஸ்ஸென் குரல் கொடுத்தார்.

'செய்திக் கதிர்' தனது முதலாவது இதழில் சைப்பிரசை உதாரணம்காட்டி தமிழர் அழிவைத் தடுக்க அமைதிப்படை தேவை'' என வலியுறுத்தியது.

இதன்பின் தமிழ் நாட்டில் குமரிஅனந்தன், இந்திய ஜனதா கட்சிப் பிரமுகர் சுப்பிரமணிய சுவாமி, தமிழர் விடுதலை முன்னணிப் பிரமுகர்களும் தொடர்ந்து கலைஞர் மு. கருணாநிதியும் இலங்கைக்கு சர்வதேச அமைதிப்படை அவசியமென எடுத்துக் கூறினர். இப்போது இரண்டு அமெரிக்க செனட்டர்களும் இதே கருத்தை வலியுறுத்தியுள்ளனர். இந்திய அரசும் இந்த யோசனையைத் தெரிவித்ததாம். தமிழர் விடுதலைக் கூட்டணியும் இதே கோரிக்கையை முன்வைத்திருந்தது!

ஆனால் இவையெல்லாவற்றுக்கும் பதிலாக இலங்கையில் போர் நிறுத்த மீறல்களைக் கவனிக்க மூவர் (ஒரு முஸ்லிம், ஒரு தமிழர், ஒரு சிங்களவர்) கொண்ட ஆணைக்குழு ஒன்றை அரசு நியமித்திருக்கிறது.

செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் இங்கு இடமில்லை!

''ஈழத்தின்மீது படையெடுப்பது என்பது இந்தியாவுக்கு ஒரு பெரிய காரியமல்ல. முப்படைகளுள் ஒன்றின் ஒரு பகுதியை ஏவிவிட்டால்போதும்; இலங்கைத்தீவு நம்வசப்படும். ஆனால் அது பிரச்னையைத் தீர்க்குமா? இலங்கையை வென்ற பிறகு என்ன செய்வது? இந்தியாவோடு இணைத்துக்கொள்வதா? அல்லது இரண்டாகக் கூறு போடுவதா? அப்படி நாட்டைத் துண்டாடினாலும் அதன் பிறகு அங்கு அமைதி நிலவுமா? சிங்களவரும் தமிழரும் யுத்தநிறுத்தத்திலிறங்காமலிருப்பார்களா? இலங்கைக்குள்ளேயேஅகதிகள்பரிவர்த்தனை இல்லாதிருக்குமா?இதைத் தவிர்க்க இந்தியா இலங்கைமீது மேலாதிக்கம் செலுத்தி வருவதா? இதை ஈழத் தமிழர்களே விரும்புவார்களா? தமிழீழத்தை ஆளப்போகிறவர்கள் யார்? ஈழத் தமிழர்களிடையே ஒற்றுமை நிலவுகிறதா? எந்த விதமாகப் பார்த்தாலும் படையெடுப்பு என்பது அனுசிதமான காரியம் என்பது உணர்ச்சிகளை மூட்டைகட்டி வைத்துவிட்டு யோசிப்பவர்களுக்குப் புரியும்.''

''கல்கி'' 8-9-85 இதழில் எழுதிய தலையங்கத்தில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

## நிகழ்வுகள் - - -

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

விரதமும், ஹர்த்தாலும் தமிழ் நாட்டில் மேற்கொள்ளப்பட்டது. இலங்கைத் தமிழர் மறுவாழ்வு நிதிக்காக ஒன்றரைக் கோடி ரூபா திரட்டும் உண்டியல் நிதி தமிழக முதலமைச்சரால் பணம்போட்டு ஆரம்பிக்கப்பட்டது.

0 தீவிரவாதிகளின் தாக்குதலினால் கிளிநொச்சி பொலிஸ் நிலையம் தீப்பற்றியதாக அறிவிக்கப்பட்டது.

**செப். 25—** சுவிற்சலாந்திலுள்ள தமிழ் இளைஞர்கள் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என அந்நாட்டு அரசு சார்பில் அறிவிக்கப்பட்டது.

**செப். 26—** சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களை விடுதலைசெய் அல்லது விசாரணை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொள்ளும் 8 நாள் பாத யாத்திரை ஆரம்பமானது.

**செப். 26 —** இந்திய வெளியுறவுச் செயலாளர்ரொமேஷ் பண்டாரி இலங்கைக்குவந்து ஜனாதிபதி பந்தோபஸ்து அமைச்சர், தொண்டமான், நீலன் அகியோரைச் சந்தித்த பின் இந்தியா திரும்பினர்.

**செப். 27 —** வில்லாச்சிப் பொலிஸ் நிலையம் அதிகாலை இரண்டு மணிக்கு பயங்கரவாதிகளால் தாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## தமிழ்க் கிராமங்கள்....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய நிறுவனச் சொந்தக் (Multi National Companies)கார நாடுகளும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவி செய்து, புதிய வகை நெல்லினங்களை அறிமுகப்படுத்தி அதன் விளைவாக ஏராளமான செயற்கைப் பசளையை இலங்கைக்கு விற்று கோடி கோடியாகப் பணம் பண்ணிக்கொண்டிருக்கின்றன. இப்படிப் பணம் பண்ணுகிறபோது கூடவே இலங்கை அரசாங்கத்தையும் (நவகாலனித்துவ சார்பு) உறுதியாக வைத்திருக்க வாக்குறுதியும், உதவியும் வழங்குகின்றன. அந்நிய செலாவணி பெறுதல் உதவித்தொகை, நீண்டகாலக் கடன், IMF, உலக வங்கி (IBRD) எல்லாம் இத்தகைய பின்னணியில் எமது நலன்களுக்கு எதிரானவைதான்.

# ஷோபாவின் நினைவுகளில்...

தோழர் ஷோபா (வதனி) தியாக வேள்விக்கு தன்னுயிர் தந்தார். ஈழத்தின் பகைவர்களுடன் போரிட்டு போர்க்களத்தில் குருதி சிந்திய முதல் பெண் போராளியாக பிரகாசிக்கிறார்.

''எங்கள் பிள்ளைகள் எம்மிடமில்லை பொழுதே நீ யாருக்காக விடிகிறாய்'' எனகின்ற ஈழத் தாய்மாரின் வேதனைப் பெருமூச்சும் அவர்கள் வடிக்கும் கண்ணீரும் என்றெம தன்னை கை விலங்குகள் போகுமோ அன்றுதான் தணியும். ஆனால் கை விலங்குகள் முறிக்க ஆர்ப்பரித்தெழுந்து போரிடும் படையுடன் பெண்களும் இணைந்து கொள்ளவில்லையானால் விடுதலைப் போர் வெற்றிபெற முடியாது. ஈழ மக்களில் அரைவாசி சனத்தொகையான பெண்கள் இணைந்து கொள்ளவில்லையானால் மக்கள் யுத்தம் ஜெயபேரிகை கொட்டமுடியாது.

இந்த உண்மையை உணர்ந்து பல நூறு பெண்கள் விழித்தெழுந்துள்ளனர் என்னும் போதும் இன்றும் தூங்கிக் கிடப்போரையும் நாம் மறந்து விடலாகாது.

தேச ஒடுக்குமுறை, வர்க்க ஒடுக்குமுறை, பெண் அடிமைத்தனம் என்னும் கொடுமைகளுக்கு முகம் கொடுக்கும் ஈழப் பெண்கள் சமையலறைகளிலும், வீட்டுச் சுவர்களுக்கிடையிலும் குமுறியபடி ஒடுங்கிக் கிடக்கின்றனர் இழைக்கப்படும் கொடுமைகள் கண்டு புயலாய் எழ வேண்டிய இவர்களது கோபாவேசம் நான்கு சுவர்களுக்கிடையே சோகஅலைகளாக எழுந்து தணிந்து விடுகிறது. பிற்போக்குத்தனமான சொத்துரிமை சமூக அமைப்பின் உளுந்துப்போன கருத்துக்களும், மரபுகளும் பெண்களின் கோபாவேசங்களை கொலை செய்து விடுகின்றன இவற்றையும் மீறி களத்து மேட்டில் பெண்களை அணிதிரட்டி அணிவகுக்க வைப்பதற்கு கடினமானதும் விடாப்பிடியானதுமான உறுதியும் முயற்சியும் இன்று நிலவும் சமூக அமைப்பு பற்றிய தெளிவான பார்வையும் தேவை.

இவ்வாறு நெஞ்சில் உறுதியும், தெளிவான பார்வையும், செயல் ஆற்றலும் கொண்டு நிமிர்ந்தெழுந்துள்ள பெண்களுடன் தோழர் ஷோபாவும் தன்னை இணைத்துக் கொண்டார்.

ஈழப் பெண்களை அணிதிரட்டி அமைப்பாக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்தி ஓய்வின்றி பணியாற்றிய தோழர் ஷோபா காரைநகரிலுள்ள சிறீலங்கா கடற்படை முகாம் தாக்குதலில் பங்கேற்றார்.

எதிரிப்படைகளின் நவீனரக ஆயுதங்களின் தாக்குதல்களையும் எதிர் கொண்டபடி உறுதி குலையாமல் போராடிய மக்கள் விடுதலைப் படை தோழர்களோடு இணைந்து முன்னேறிய ஷோபா கொல்லப்பட்டார், எதிரியின் பலம்வாய்ந்த தளத்தின் மீது தொடுக்கப்பட்ட திரமிக்க தாக்குதலில்,





தனதுயிரை தந்து இரத்த சாட்சியமாகி ஷோபா இன்னுயிர் இழந்தார்.

ஷோபாவைத்தான் இழந்து விட்டோம். அவர் நேசித்த இலட்சியங்களை என்றுமே நாம் இழக்க மாட்டோம். எம்மிடமிருந்து ஷோபாவை பிரித்த எதிரிகள் எங்கள் சுதந்திரக் கனவுகளைப் பறிக்க முடியாது. போரிடும் உறுதியை குலைக்க முடியாது.

போராட்டம் தொடர்கிறது... அது முன்னேறி வருகிறது. போராடும் படையுடன் ஷோபா வாழ்கிறார். களத்து மேட்டில் இரத்த சாட்சியமாய் ஒளிர்கிறார். அவர் வழியில் ஆயிரமாயிரம் பெண்கள் அணிவகுக்கின்றனர்.

---

எமது விடுதலைப் போராட்டத்தில் எவரும் தனி மனிதனாகவோ அல்லது குழுவாகவோ அல்லது தனி அமைப்பாகவோ செயற்பட உரிமையுடையவர் ஆவார். அதனை நாம் மதிக்கிறோம்.

— செந்தளம்

# தமிழர் நிதியம்

நிதி நிறுவனம்

## வெளிநாட்டில் இருக்கும் உங்கள் பிள்ளைகளோ, உறவினரோ, நண்பரோ வாழ்நாள் முழுவதும் சந்தோஷமாக இருக்க உதவுங்கள்

## வெளிநாட்டு முதல் மூலதனத் திட்டம்

FOREIGN CAPITAL INVESTMENT SCHEME

FULL NAME ..........................................

ADDRESS ABROAD ..........................................

EMPLOYMENT ..........................................

PARENT'S/GUARDIANS NAME & ADDRESS IN SRI LANKA

..........................................

..........................................

உங்கள் நேரத்தில் இரண்டு நிமிடங்களை ஒதுக்கி மேலேயுள்ள கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பி உதவுங்கள்.

அவர்கட்கென்றே பிரத்தியேகமாய் உருவாக்கப்பெற்ற எங்கள் வெளிநாட்டு முதல்மூலதன திட்டத்தைப்பற்றி அவருடன் நாங்கள் தொடர்பு கொள்வோம்.

அவர்கள் பாடுபட்டு சம்பாதித்த பணத்தை எவ்விதத்திலும் முடங்க விடாமல், சேமித்து, அவர் நாடு திரும்பியதும் பெற விரும்பும் நல்வாழ்வை அவர் விருப்பத்திற்கமைய திட்டமிட்டு செயற்படுத்தும் வசதிகளை அளிப்போம்.

அவர்களின் உழைப்பு வருமானத்தை எமது கணக்கிற்கு மாற்றும் போது, அன்றில் அவர்களால் உறுதி அளிக்கப்பட்டவர்கள் பெறும் போது-நாம் அன்றைய சந்தை நாணய மாற்று விகிதத்திலேயே கணக்கை செயற்படுத்துவோம்.

இச்சேமிப்புத் தொகைக்கு அதீத வட்டியுடன், நிறுவன செலவு தொகை தள்ளுபடியும் சலுகையாக கிடைக்கும். அத்துடன் காலவிரயமின்றி பணமாற்றமும் எம்மூடாக செயற்படுத்தப்படும்.

**தமிழர் நிதியம்**
**நிதி நிறுவனம்**

உங்கட்கூடாக உங்கள் இடங்களில் வேண்டிய வசதிகளை அளித்து தொழிற்படும் நிறுவனம் எமது நிறுவனமே.

THAMIL FUNDS AND FINANCE LIMITED
140 நாவலர் வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.
140 NAVALAR ROAD, JAFFNA, SRI LANKA.
REGD NO: PVS 8483 ☎ 22437

## உங்கள் பண வைப்புக்கு 36% அதீத வட்டி வழங்கும் தாய் நாட்டிலேயே ஒரேயொரு நிதி நிறுவனம்



"செய்திக்கதிர்" சாயிபாபா அட்வேர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 1 - 10 - 85 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி : 23336